# பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்

( பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு )

முனைவர். ப. மருதநாயகம்
கவிஞர் பொன்னடியான்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 5.
2003

# பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும்

# பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்

(பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் ப.மருதநாயகம்
கவிஞர் பொன்னடியான்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

2003

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண். 252
திருவள்ளுவராண்டு 2034 சித்திரை - ஏப்பிரல் 2003

| | | |
|---|---|---|
| நூல் | : | பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும்<br>பாவேந்தரும் மொழிபெயர்ப்பும் |
| ஆசிரியர் | : | முனைவர் ப. மருதநாயகம்<br>கவிஞர் பொன்னடியான் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பக்கம் | : | viii + 66 |
| தாள் | : | டி.என்.பி.எல். மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 டெம்மி |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு.30-00 |
| படிகள் | : | 500 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி<br>அச்சகம், தஞ்சாவூர் |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் இ.சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

## அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் புகழ்மிக்க கவிஞர்களுள் பாவேந்தர் பாரதிதாசன் பெரிதும் போற்றப்பெறுபவர். தமிழின் சிறப்பையும் மேன்மையையும் உயிரோட்டத்துடன் பாடியவர். பாவேந்தர் பாரதிதாசன் தம் கவிதைகளில் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் சீர்திருத்தங்களையும் படிப்போர் மனம்கொள அழகுறப் பாடியவர். தொழிலாளர் மேம்பாடு குறித்து அவர் பாடிய பாடல்கள் மேடைதோறும் முழங்கின. சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் துயரங்களைப் புரட்சிக் கவிஞர் உணர்ச்சி தோன்றப்பாடி அவர்தம் நல்வாழ்விற்காக உரத்தகுரல் எழுப்பியவர். சமுதாய விழிப்புணர்வைத் தம் கவிதைகள் வழி மக்களிடையே உருவாக்கிப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

பாவேந்தர் படைப்பாக்கம் குறித்து இன்று பல்வேறு நிலைகளில் ஆராயப்பெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவிய பாரதிதாசன் அறக்கட்டளை வாயிலாக ஆண்டுதோறும் பாரதிதாசன் குறித்து அரிய சொற்பொழிவுகளும் கருத்தரங்கங்களும் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் 1999 ஆம் ஆண்டில் நிகழ்ந்த அறக்கட்டளைப் பொழிவுகள் நூல் வடிவில் வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியது.

புதுச்சேரிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ப. மருதநாயகம் அவர்களும், முல்லைச்சரம் இதழ் ஆசிரியர் கவிஞர் பொன்னடியான் அவர்களும் ஆற்றிய சொற்பொழிவுகள் நூல்வடிவில் வெளிவருவது பாராட்டத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறையின் சார்பில் நிகழ்ந்த இக்கருத்தரங்கில் பொழிவுகள் ஆற்றிய அறிஞர்க்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றி.

நூல்வடிவில் உருவாகத் துணைநின்ற மொழிபெயர்ப்புத் துறையினருக்கும், பதிப்புத் துறையினருக்கும் பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர் (இ. சுந்தரமூர்த்தி)
22.4.2003

# நூல் அறிமுகம்

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையில் 29.04.1999 அன்று நடைபெற்ற பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கின் உரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் கதிர். மகாதேவன் அவர்கள் தலைமையில், பாண்டிச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத்தலைவர் முனைவர் ப. மருதநாயகம் அவர்கள் (பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் என்னும் தலைப்பில்) தொடக்கவுரையாற்றினார். முனைவர் பிரேமா நந்தகுமார் (எழுத்தாளர்), முனைவர் அ. தட்சிணாமூர்த்தி (முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை) ஆகியோர் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெற்றன. தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கி. அரங்கன் அவர்கள் தலைமையில் முல்லைச்சரம் திங்களிதழ் ஆசிரியர் கவிஞர் பொன்னடியான் அவர்கள் (பாவேந்தரும் மொழிபெயர்ப்பும் என்னும் தலைப்பில்) நிறைவுரை ஆற்றினார். இக்கருத்தரங்கத் தொடக்கவுரையும், நிறைவுரையும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை நிதியிலிருந்து பதிப்புத்துறையின் சார்பில் இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த மாண்பமை துணைவேந்தர், பதிவாளர் (பொறுப்பு), பதிப்புத்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் ச. இராதாகிருட்டிணன்
மொழிபெயர்ப்புத்துறை

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் | 01 |
| பாவேந்தரும் மொழிபெயர்ப்பும் | 29 |

# பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும்

முனைவர் ப. மருதநாயகம்

பாரதிதாசனின் பாடுபொருள்கள் மிகப்பல: அத்தகைய வீச்சை வேறு கவிஞர்களிடத்தில் காண்பது அரிது. கவிதை எண்ணிக்கையிலும் பொருட்பரப்பிலும் அவரோடு போட்டியிடத்தக்க நிலையிலிருக்கும் ஒரே இந்தியக் கவிஞர் தாகூர் ஆவார். காதல் பற்றிக் கவிதை மழை பொழிந்த வங்கக் கவிஞரும் கூடச், சமுதாயத்தின் அடித்தட்டில் இருப்போர் பற்றிப் புரட்சிக் கவிஞர் அளவுக்குப் பாடியிருக்கிறார் என்று சொல்லமுடியாது. தமிழ், தமிழர், தமிழகம், காதல், பெண், தொழில் உயர்வு, தொழிலாளர் நலம், இயற்கை, ஆரியர் சூழ்ச்சி, திராவிடப் பண்பாடு, சுயமரியாதை, புதிய உலகு, புரட்சியின் தேவை, மானிட சக்தி, விடுதலை வேட்கை, சகோதரத்துவம் ஆகியவை பற்றியெல்லாம் பாரதிதாசன் பல பாவகைகளில், பல பண்களில், பல வடிவங்களில், பல உத்திகளைக் கையாண்டு எண்ணிறந்த கவிதைகளை யாத்துள்ளார். இவற்றுள் தமிழும், தொழில் சிறப்பும் அவர் மிகவும் விரும்புகின்ற தலைப்புகள். இவை பற்றிய ஏராளமான தனிக் கவிதைகளைத் தவிர, எப்பொருள் பற்றிய சிறு கவிதையாயினும் குறுங்காப்பியமாயினும் பெருங்காவியமாயினும் தமிழைப் பற்றியும், தொழிலாளர் மேன்மை பற்றியும் அவற்றில் எவ்வாறேனும் பேசாமல் விடார். அமுதவல்லியிடம் தன் காதல் பற்றிப் பேசுகின்ற உதாரன்,

காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?
பிறர்சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப துண்டோ?
நேர்இருத்தித் தீர்ப்புரைத்துச் சிறையில் போட்டால்
நிறைதொழிலா ளர்களுணர்வு மறைந்து போமோ?

என்று கேட்கின்றான். பாரதிதாசன் இதயத்தில் தமிழ் பெற்ற இடத்தைப்பிடிக்க முயலுகின்ற இன்னொரு பாடுபொருள் உண்டானால் அது தொழிலாளர் உயர்வும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பெருமையுமே.

பாரதிதாசன் தமது இரண்டு மூன்று நீண்ட கதைப்பாடல்களில் மட்டும் அரசக் குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் உயர்வர்க்கத்தாரையும் கவிதை நாயகர்களாக்குகிறார். ஏனைய கவிதைகள் எல்லாவற்றிலும் ஏழைத் தொழிலாளர்களும், பஞ்சமரும் தாழ்த்தப்பட்டோரும் கீழ் நடுத்தரவர்க்கத்தினரும் ஏற்றம் பெறுகின்றனர். அவர்களது பண்பாட்டுச் சிறப்பும் கள்ளங்கபடமிலாத் தன்மையும் அறியாமையும், மூட நம்பிக்கைகளும், இன்ப துன்பங்களும் அச்சங்களும், ஆசைகளும், உயர்வு தாழ்வுகளும், காதல் வாழ்வும் பரந்து பேசப்படுகின்றன. **இசையமுதின்** முதல் தொகுதியில் பாடல்களெல்லாம் பாமரரைப் பற்றியவையே. வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், தறித்தொழிலாளி, உழவன், உழத்தி, ஆலைத் தொழிலாளி, இரும்பாலைத் தொழிலாளி, கோடாலிக்காரன், கூடைமுறம் கட்டுவோன், பூக்காரி, குறவன், சுண்ணாம்பு இடிக்கும் பெண் ஆகியோரெல்லாம் இளவரசன் இளவரசி போல் பெருமிதத்துடன் உலாவரக் காணலாம். **இளைஞர் இலக்கியம்** எனும் தொகுதியில் குயவர், தட்டார், கொத்தனார், கருமார், தச்சர், கொல்லர், இலைத் தைப்போர், குடை பழுது பார்ப்போர், சாணை பிடிப்போர், பூட்டுக்குச் சாவி போடுவோர், குடுகுடுப்பைக்காரன், பாம்பாட்டிகள், குரங்காட்டிகள் ஆகியோரது அவல வாழ்க்கை படம் பிடித்துக்காட்டப்படுகிறது.

வண்டிக்காரன் மனைவி பாடுகிறாள்:

அதோபாரடி அவரே என் கணவர் - அதோ பாரடி!
புது மாட்டு வண்டி ஓட்டிப்
போகின்றார் என்னை வாட்டி! அதோ பாரடி!
இருப்பவர் உள்ளே முதலாளி செட்டி
ஏறுகால் மேல்தான் என் சர்க்கரைக் கட்டி
தெரியவில்லையோடி தலையில் துப்பட்டி?
சேரனே அவர் என்றால் அதில் என்ன அட்டி? (ப.222)

வயலில் வேலை செய்யும் உழத்தியைப்பற்றி அவள் காதலன் கூறுகின்றான்:

களையெடுக்கிறாள் - அதோ
கட்டழகுடையாள் சிற்றிடையாள் - அதோ
களையெடுக்கிறாள்!

வளவயல்தனில் மங்கைமாருடன்
இளங்கரும்பிடைச் செங்கரும்புபோல்
களையெடுக்கிறாள்!
கவிழ்ந்த தாமரை
முகம் திரும்புமா? - அந்தக்
கவிதை ஓவியம்
எனை விரும்புமா? (ப.224)

ஆலைத்தொழிலாளியின் மனைவி, மாலை மணி ஐந்தானபின்னும் சங்கு ஊதாமல் இருக்கிறதே என்று உளம் கொதித்து அவன் வந்தபின் நிகழப் போவதை எண்ணி இறும்பூது எய்துகிறாள்:

குளிக்க ஒரு நாழிகை யாகிலும் கழியும்:
குந்திப்பேச இரு நாழிகை ஒழியும்
விளைத்த உணவில் கொஞ்ச நேரமும் அழியும்
வெள்ளி முளைக்கு மட்டும் காதல்தேன்
பொழியும். (ப.225)

இன்னொருத்தி,

தொழிலாளியின் தோள் களைத்தான் அணைப்பேன
அவன்
தொடத் தொடத்தான் இன்பம் திளைப்பேன்

என்று பாடுகிறாள்.

கூடைமுறம் கட்டுவோன் தன் காதலியிடம்,

பாடி நிறுத்தி நீ கொடுத்திடும்
பாக்கு வெற்றிலைச் சருகும் - அத
னோடு பார்க்கும் பார்வையும் என்
உயிரினை வந்துதிருகும் (ப.227)

என்று ஏக்கத் தோடு புலம்புகிறான்.

கழைக்கூத்தாடியின் வயிற்றுக்கவலை அவன் சொற்களிலேயே கவிதையாகிறது:

மக்களெ பெத்த மகராசருங்க,
கண்ணால் பாத்துக்காசு போடுங்க,
ஒருதுட்டு உங்கட்கு ஒருவாய் வெத்தலே,
எங்களுக்கதுதான் திங்கற சோறு!
மொதல் ஒருவேலே, முழக்கடா மோளம்
திநதிடும் திநதிடும் திநதிடும் திநதிடும். (ப.1686)

இக்கவிதைகளிலெல்லாம் எளிய தொழிலாளர்களோடு தன்னை இரண்டற இணைத்துக் கொள்வதில் கவிஞனுக்குத் தடுமாற்றமில்லை: மாறாக, அதில் பேரின்பம் அடைகிறான். காலைப் போதினைக் கனலால் பொசுக்கிச் சூரியன் ஏறி உச்சியில் சூழும் போதும் உழவர்கள், சுடுவெயில் தோலை உரிக்க, வேலை செய்வதை எண்ணி மனம் நோகின்றான்: தான் மட்டும் புது மலர்ச்சோலையில் புகுந்து கொண்ட குற்ற உணர்வு அவன் நெஞ்சைத் தாக்குகிறது.

வியர்வையும் அயர்வுமாய்ப் பண்ணை ஆட்கள்
வந்து நின்று வணக்கம் செய்தனர்

ஐயகோ நெஞ்சமே, இந்த ஆட்கள்
தாங்கொணாக் கனலை எவ்வாறு தாங்கினர்?

களைபோக்கு சிறு பயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க்குரியது என்பதையே! (ப.208)

பாரதிதான் தம் நீண்ட கதைப்பாடல்களிலும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் ஏழைத் தொழிலாளர்களின் நிலை பற்றியும், மதமெனும் அபினி விளைத்துவரும் கொடுமை பற்றியும், வர்க்கப் போராட்டத்தின் தேவை பற்றியும், பாத்திரங்களின் கருத்துப் பரிமாறலாகவோ, கவிஞன் கூற்றாகவோ, உவமையாகவோ வலியுறுத்திவிடுகிறார். "சஞ்சீவிபர்வதத்தின் சாரலில்" குப்பன் என்னும் வேடக்குமரன்தான் கதைத்தலைவன்.

இத்தாலிச் சோதகனே! என்ன மதியுனக்கே?
செத்துமடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபேதம் கண்டாய்?
செவ்வைபெறும், அன்பில்லார் தீயபேதம் கொள்வார்.
எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங்கீர்த்தித் தாழ்வடைய வுப்பார்கள்;
பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! (ப.114-15)

என்று ஒரு பிரெஞ்சுக்காரன் பேசுவதைக் குப்பனும் அவன் காதலியும் கேட்கிறார்கள்.

தேகம் அழிந்துவிடும்; சுற்றத்தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம் மற்றுமிந்தப்
பாழுலகம் பொய்யே; பரமபதம் போ (ப.115)

என்று ஏமாற்றிப் பிழைப்பாரைக் கவிஞர் சாடுகிறார். வடக்கிருந்து வந்த ஆரியர்களும், இந்துமத குருமார்களும் முதலாளித்துவச் சமுதாயத்தின் தூண்களாகவும் திராவிட இனத்தின் தொழிலாளி வர்க்கத்திற்காகப் போராட வேண்டிய

பொதுவுடைமைவாதியாகச் சுயமரியாதை இயக்கத்தாரும் பல கவிதைகளில் காட்சி தருகிறார்கள்.

'பில்கணியம்' என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்ட 'புரட்சிக்கவி' ஒரு காதல் காவியம். அரசன் மகள் மேல் கவிஞன் ஒருவன் கொண்ட பேரன்பைப் பற்றிப்பேசுவது. ஆனால் கொலைக்களத்தில் கவிஞன் தொழிலாளர் சிறப்பைப் பாடுகின்றான்.

இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவ தன்றிப்
புக்கபயன் உண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும் சேற்றி னுக்கும்
கக்கும்விஷப் பாம்பினுக்கும் பிலத்தி னுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்க ளுக்கும்
பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின் றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின் றானா? (ப 141)

அரசனுக்கும் கவிஞனுக்கம் அரசன் மகள் காரணமாக விளைந்த தகராறு அரசுக்கும் மக்களுக்கும் ஏற்படும் போராக மாற்றப்படுகிறது.

அரசன்மகள் நன்நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுரிமை பொதுவாக்க நினைத் திருந்தாள்!
ஐயகோ சாகின்றாள்! அவளைக் காப்பீர்! (ப.142)

என்று கவிஞன் கதறுகின்றான். செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டாருக்கே நவையின்றி எய்துதற்குச் சட்டம் செய்தார் நலிவில்லை நலமெலாம் வாய்த்தங்கே என்ற குடியாட்சி அமைவதாகக் கதை முடிகிறது.

"வீரத்தாய்" எனும் காவியம் பெண்ணரசி ஒருத்தி தன் இன மைந்தனை வஞ்ச நெஞ்சம் படைத்த சேனாபதியிடமிருந்து காக்கப் போராடும் கதையைக் கொண்டது. ஆனால் இறுதியில் வெற்றி பெற்ற மன்னன் மனைவி, மணிபுரியை மக்களுக்குச் சொந்தஉடைமை ஆக்குகிறாள். அவள் மகன்,

எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!
வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக!
வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே! (ப.156)

என்று பொதுவுடைமைச் சமுதாயம் பற்றி இறுதி உரை ஆற்றுகின்றான்.

"மாந்தோப்பில் மணம்" எனும் கவிதையில் குள்ளச் சமூகத்தின் கட்டுகளை உடைத்து ஒரு விதவையை மணக்க முன்வரும் கதைத் தலைவனும் ஒரு குப்பனே. அவன் வாயிலாகவும் கவிஞன்,

"பேடி வழக்கங்கள், மூடத்தனம் - இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்" (ப.164)

என்று சமய நூல்களைச் சாடுகின்றான்.

"குறிஞ்சித்திட்டு" என்னும் நீண்ட காப்பியம் ஆரிய, திராவிடப் பண்பாட்டுப் போரைப் பற்றியது. அதிலும் இறுதியில் பொதுவுடைமைத் தத்துவத்தின் வெற்றி பேசப்படுகிறது. நெடுமாறன், 'அரசன் மனிதன் மனிதன் அரசனா? . . . . . அரச பதவியை அழித்து மக்கள் சரிநிகர் என்பதைச் சமைக்க வேண்டும்' என்று முழங்குகின்றான். 'ஆலிலை அடுக்குமேல் அம்மிக் கல்லென

அரச பதவி ஏன்?' என்று அழகான உவமைமூலம் மன்னராட்சியின் மடமையைச் சுட்டிக் காட்டுகிறான். மார்க்சியவாதிகளின் இறுதி இலக்கான அரசாங்கமே இல்லாத பொதுவுடைமைச் சமுதாயம் இங்குப் பேசப்படுகிறது.

மதம் அகன்ற சாதி மறைந்த
அரசு கடந்த ஓர் வாழ்க்கை அமைப்பது
நம் கடன்; (ப.1303)

என்று நெடுமாறன் அதனை வர்ணிக்கிறான்.

மார்க்சியவாதிகள் மனித தத்துவத்தின் மகிமையையும் மனித சமுதாயத்தின் ஆற்றலையும் விதந்து கூறுவர். மனிதப்பிறவி பாவப்பட்டது என்பதையோ, உலக முன்னேற்றம் இயலாதது என்பதையோ அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. பாரதிதாசன் இக்கருத்தைப் பல பாடல்களில் சிறப்பிக்கின்றார்.

மானிடம் என்பது புல்லோ? - அன்றி
மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ?
கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான்!
. . . . . . . . . . .
மானிடம் என்பது குன்று - தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக்கினிதாக - இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீ பார்! - வாழ்வின்
வல்லமை மானிடத் தன்மை என்றேதேர். (ப.203)

மனித சமுதாயத்தின் கூட்டு வாழ்க்கைக்கு எதிரான தனி மனித தத்துவத்தை (Individualism) மார்க்சியவாதிகள் கண்டிப்பர். தனி மனிதன் சமுதாய முன்னேற்றத்திற்கு ஒன்றும் செய்ய முடியாதென்றும் அவன் தன்னுடைய ஆன்ம விமோசனத்திற்கு வழி செய்து கொண்டு சமுதாயத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் சில மதவாதிகள் கருதுவர். இதனை எள்ளி நகையாடும் பாரதிதாசன் மனிதன் உலகம்

தன்னுடையதென்பதில் பெருமை கொள்ள வேண்டும் என்றும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் போராட வேண்டுமென்றும் குறிப்பிடுவார்.

மனிதரில் நீயும் ஓர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்திச் சுடர்முகம் தூக்கு!
மீசை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக்கொளி செய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!
. . . . . . .
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்; உடைமை மக்களுக்குப்பொது.
புவியை நடத்து; பொதுவில் நடத்து! (ப.205)

என்பார் புத்தகச் சாலையின் பயன்களைப் பற்றிப்பேசும் போதுகூட,

மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்பதுணர் வதற்கும் (ப.212)

நூல்கள் துணை செய்யும் என்று கூறுவார்.

பாரதிதாசன் கவிதைகளில் மனித ஒற்றுமை, புதிய பொதுவுடைமை உலகம், உலகளாவிய பெருநோக்கு ஆகியவைபற்றிப் பேசுபவை சிறப்பிடம் பெறத்தக்கவை. தமிழ், தமிழகம், தமிழர் பற்றி அவர் எல்லையில்லாத காதலோடு பேசினாரேனும் மனிதனின் குறுகிய கண்ணோட்டத்தைக் கண்டித்தும் உலகப் பொதுநோக்கை உயர்வுபடுத்தியும் பல கவிதைகள் எழுதினார்.

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தான் உண்டென்போன்

சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
. . . . . . . . . . . . .
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! (ப.195)

"உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" எனும் கார்ல் மார்க்சின் அறை கூவலை ஏழைத் தொழிலாளர்களுக்குப் புரியும் மொழியில் எடுத்துச் சொல்கிறார்.

நாடிய ஓர்தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே!
. . . . . . . . . . . . .
பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம்
கூடித் தொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே!
. . . . . . . . . . . . .

கூடித்தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி தோழர்களே!
கூடைமுறம் கட்டுதரும் கூடித் தொழில் செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே! (பக்.197-198)

வன்மையற்ற வழிகளில் பொதுவுடைமைச் சமுதாயத்தை அடையமுடியுமென்று கார்ல் மார்க்ஸ் கருதவில்லை. எனவேதான் வர்க்கப் போராட்டத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். முதலாளி வர்க்கத்தை வேரறுக்க வேண்டுமென்று லெனினும் எங்கல்சும் கூறினர். சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருப்போர்க்கு எதிராக வன்முறைகள் கையாளப்படவேண்டும் என்றும் அவர்களை வழிக்குக் கொண்டுவர வேறுவகையில் செயல்பட முடியாதென்றும் பாரதிதாசன் எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி, வாளெடுக்க வேண்டியதின் தேவையை வெளிப்படையாகவும் பிரச்சாரம் செய்கிறார். அவரால் போற்றப்பட்ட அவர் காலத்துப் பேரறிஞர் பெர்னாட்ஷா அமைதி வழியில் சோஷலிஸம் (Fabian Socialism) பெற முனையவேண்டுமென்று

கூறியதையெல்லாம் பாரதிதாசன் ஒதுக்கித் தள்ளினார். "அக்கா வந்து கொடுக்கச் சுக்கா, மிளகா சுதந்திரம் கிளியே" என்று கேட்ட கவிஞர்க்குப் போரற்ற வழியில் பொதுவுடைமை, கொஞ்சம் கொஞ்சமாகச் சோஷலிஸம் என்பதில் எல்லாம் எள்ளளவும் நம்பிக்கை இல்லை. காந்தியடிகள் பேசிவந்த தர்மகர்த்தா சோஷலிஸம் கனவுக்குதவாத கருத்தொன்று எண்ணினார்.

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே (ப.213)

என்று முழங்கினார்.

மதத்தின் பேரால், கடவுளின் பேரால், தொழிலாளர் கைகளைச் சமயவாதிகள் கட்டிப் போட்டிருப்பதைத் "தளைஅறு" என்ற கவிதையில் விளக்குகிறார். இத்தடை முதலில் விலக்கப்பட்டால்தான் முதலாளி வர்க்கத்தை ஒழிக்கமுடியும் என்பார். இதன் காரணமாகக் கடவுள் நம்பிக்கையையும் கிண்டல் செய்கிறார்.

கடவுள்கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள்என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்

உடமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்;
'கடையர்' 'செல்வர்' என்றதொல்லை
கடவுள்பேர் இழைத்ததே!

. . . . . . . . .

கடவுள்ஆணை யாயின்அந்த
உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான் முன்னேற்றுமோ?தன்
கழுதைதான் முன்னேற்றுமோ?

நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடல்உழைப்பு இலாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்

கடவுள்ஆணை என்றுரைத்த
கயவர்கூட்ட மீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம் (ப.197)

முதலாளிகளைப் பாதுகாக்க மதவாதிகள் கடவுள் நம்பிக்கையைக் கருவியாகக் கொள்கிறார்கள் என்பதைப் பல கவிதைகளில் பாரதிதாசன் சுட்டக் காணலாம். "தொழிலாளர் விண்ணப்பம்" என்ற கவிதையில் தொழிலாளர்கள் தாங்கள் மனித சமுதாயத்தின் நன்மைக்காகச் செய்த செயல்களையெல்லாம் கூறி,

சந்தையில் மாடாய் - யாம்
சந்ததம் தங்கிட வீடு மில்லாமல்
சிந்தை மெலிந்தோம் - எங்கள்
சேவைக் கெலாம்இது செய்நன்றி தானோ? (ப.199)

என்று கல்லும் கனியக் கேட்டுவிட்டு இறுதியிலே தாங்கள் வன்முறைக்குத் தள்ளப்படுவோம் என்ற எச்சரிக்கையோடு விண்ணப்பத்தை முடிக்கிறார்கள்.

இப்பொழு தேநீர் - பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே. (ப.199)

செல்வந்தர்களின் சுயநலப்போக்கைக் கேலி செய்து இறுதியில் அச்சுறுத்தும் 'கவிதை', "தலையுண்டு, செருப்புண்டு".

நிலம்ஆளும் மனிதரே! நிலமாளு முன்எனது
நேரான சொற்கள்கேட்பீர்
நீர்மொள்ள வும்தீ வளர்க்கவும் காற்றுதனை
நெடுவெளியை அடைவதற்கும்

பலருக்கும் உரிமைஏன்? பறிபோக லாகுமோ
பணக்காரர் நன்மையெல்லாம்?
பறித்திட்ட நிலம்ஒன்று! பாக்கியோ நான்குண்டு!
பறித்துத் தொலைத்துவிட்டால்

நலமுண்டு! பணக்காரர் வயிறுண்டு! தொழிலாளர்
நஞ்சுண்டு சாகட்டுமே!
நற்காற்று, வானம்,நீர், அனல்பொது அடைந்ததால்
நன்செயும் பொதுவேஎனத்

தலையற்ற முண்டங்கள் சொன்னால் பெரும்பெரும்
தலையெலாம் உம்மில்உண்டு!
தாழ்ந்தவர்க் கேதுண்டு; கால்செருப் பேஉண்டு
தகைகொண்ட அன்னைநிலமே!

முதலாளித்துவ சமுதாயத்திற்கான அறிவு பூர்வமான வாதங்களை முன்வைக்க மூளையைக் கசக்கி முழுநேரம் அவர்களுக்குத் துணைபோக அறிவு ஜீவிகள் பலர் இருக்கிறார்கள் என்பதை, "பெரும்பெரும் தலைகள் உம்மிடம் உண்டு" என்றும், அவர்களுக்குப் பதில் சொல்லத் தலையற்ற முண்டங்களான தொழிலாளர்களிடம் கால் செருப்பைத் தவிர வேறொன்றுமில்லையென்றும் சொல்லிக் கவிஞர் சின நகை பூப்பதை இக்கவிதையில் காணலாம்.

செல்வந்தர்களுக்கெதிராக வன்முறையைத் தூண்டும் கவிதைகளில் மிகவும் வெளிப்படையானது, "உலகப்பன் பாட்டு" ஆகும். செல்வந்தர்கள் உழைப்பால் அல்லது ஏமாற்று வேலையில் செல்வத்தைக் குவித்துக் கொண்டு ஏழைகளை நடுத்தெருவில் நிறுத்திவிட்டதை முதலில் சொல்லி விடுகிறார்.

கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக்கொண்டு ஏப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார், என்ன செய்வேன்!
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்

ஆனால், ஏழை முதலாளி என்ற பாகுபாடு இல்லாமல் செய்ய "மயிலே, மயிலே இறகுபோடு" என்பது போன்ற வேண்டுகோள்கள் எல்லாம் செல்வந்தர்களிடம் செல்லுபடியாகா. எனவே கவிஞர் தமது யோசனையை உலகப்பனுக்குத் தருகிறார்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ

இரக்கத்தை மிகுவிக்கும் காரணங்களை எடுத்துச் சொல்லி, செல்வர்கள் சிந்தை நெகிழவில்லையானால் அன்னார் கொடிய விளைவுகளைச் சந்திக்கநேரும் என்று அச்சுறுத்தும் கவிதைகளில் உயர்ந்தது "நீங்களே சொல்லுங்கள்".

சித்திரச் சோலைகளே! - உமை நன்கு
திருத்தஇப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே.

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.

என்றெல்லாம் தொழிலாளர்களின் சாதனைகளைக் காட்சிப் பொருள்களாகப் பட்டியலிட்டுச் செல்லும் கவிஞர் கடைசியில்,.

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ?
. . . . . . . . . .
கிலியை விடுத்துக் கிளர்ந்தெழு வார்இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை.

என்று முடிப்பார்.

வர்க்கப் போராட்டத்தின் தேவையை நேரடியாக வலியுறுத்தும் கவிதைகளைப் பொறுத்தமட்டில் தரத்திலும் அளவிலும் பாரதிதாசனை விஞ்சக் கூடிய கவிஞர்களை மேலை நாடுகளிலும் காணல் அரிது. அப்பாடல்களில் பலவற்றிற்கு எளிய சொல்லாட்சியும், அறிவையும் உள்ளத்தையும் ஒருசேர ஈர்க்கும் உவமைகளும் இசை இனிமையும் உரமேற்றுகின்றன.

பொதுவுடைமைத் தத்துவத்தைத் தத்துவமாகவே எடுத்துக்காட்டி வாதிடுவதில் பாரதிதாசன் ஈடுபாடு காட்டவில்லை. இதற்காக, மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களை ஆழமாகப் பயின்று மாற்றார் சொல்லும் வாதங்களை மறுத்து, கோட்பாடுகளைக் கோட்பாடுகளாகவே தரும் முயற்சியில் அவருக்கு ஆர்வம் இல்லை.

"அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்கள்" என்ற கவிதையில் தமக்கே உரிய முறையில் சில மேலைக் கோட்பாடுகளை விளக்குகிறார்.

இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டை வீட்டானுக்கு ஒன்று அளித்தல் சோசலிசம்!
கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது காபிடலிசமாம்!
ஆவிரண்டையும் ஆள்வோர்க்கு விற்றுத்

தேவைக்குப் பால்பெறச் செய்யல் கம்யூனிசம்!
பசுவிரு கறவையைப் பறித்த ஆள்வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது பாசிசம்!
உரியவன் தன்னை ஒழித்தே
கறவை இரண்டையும் கைப்பற்றல் நாசிசம்!
இரண்டு கறவையால் திரண்ட பால் அனைத்தையும்
சாக்கடைக்காக்குவதுதான் நியூடிலிசம்!
எதனை இவற்றில் ஏற்பாய்
அதனை உன் நாட்டுக் காக்குக தோழனே! (பக்.1491-92)

உடல் உழைப்பை உயர்த்திப் பேசும் போதும், சாதி, மத, நிறப் பாகுபாடுகளைச் சாடும் போதும், மேலை நாடுகளில் போற்றப்படும் பொதுவுடைமை வாதிகளையோ, அவர்தம் நூல்களையோ அவர் அதிகம் சுட்டுவதில்லை. தமிழ் மண்ணும் தமிழ்ச் சமுதாயமும் தமிழ் இலக்கிய மரபும் ஏற்றுக் கொண்ட, வழி வழியாகப் போற்றிப் பேணும் கருத்துக்களையே பொதுவுடைமை முலாம் பூசித் தருகிறார். தீண்டாதார் என்று சிலரை ஒதுக்குவது முறையற்றதென்பதை விளக்கும்போது,

பொற்புடை முல்லைக் கொத்தில்
புளியம்பூ பூத்த தென்றால்
சொற்படி யார் நம்புவார் - சகியே
சொற்படியார் நம்புவார்? (390)

என்று கேட்பார். பொதுவுடைமையார் காட்டும் புத்துலகம் தமிழ் மரபு போற்றும் தமிழ்ப் பண்பிற்கேற்றதே என்பார்.

**தமிழ்ப் பண்பில் நாம் சிறந்தோம்**
**சாதிமதம் தவிர்ப்போம்**
**தமிழன்பில் நாம் குளித்தோம்**
**தனித்திருத்தல் அவிப்போம்**
**பூங்குன்றன் மொழிப்பொருளாய்ப்**
**புத்துலகம் காண்போம்**
**பாங்கமைக்கும் பொதுவுடைமை**
**பண்பனைத்தும் பூண்வோம்!** **(ப.1791)**

"மதம் எதற்கு?" என்று கேட்கும்போது மார்க்சைச் சொல்லாமல்,

"இராமல் ஒழிக மதப்பேய் என்றார்
இராமலிங்க அடிகள்" என்றே பாடலைத் தொடங்குவார்;
(ப.1491)

மானிடச்சாதி ஒன்றே, இதில் உயர்வு, தாழ்வு இல்லை எனும்போது,

முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமா னுசனை ஈன்ற தன்றோ? (பாரதி 193)

என்பார். ஏழைகளைப் புறக்கணித்தல் தீதென்று வாதிடும்போது எவ்வுயிரும் பரன் சந்நிதியாமென்னும் திருமூலர் கூற்றை நினைப்பூட்டுவார்.

நடமாடும் கோயில் கட்கே
நாமொன்று தந்தால் - இரங்கி
நலமொன்று புரிந்தால் - அதுதான்
உடனேபோய்ப் பரமனுக்கே
உவப்பைச் செய்யும் அப்பா - என்பார் (507)

மனித சமுதாய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் போதெல்லாம் வள்ளுவரைக் கொணரத் தவறமாட்டார்.

சுயமரியாதை இயக்கம் காட்டும் சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாயமே என்று பேசும் பாரதிதாசன் அஃதே நெருப்பில் துடித்திடும் மக்கட் கெல்லாம் நல்ல காப்பு என்றும் சமத்துவமான நற்கோட்டை (550) என்றும் வருணிப்பார். நம் நாட்டில் பொதுவுடைமைத் தத்துவத்திற்கு எதிரான கருத்துக்களின் தோற்றத்திற்கெல்லாம் ஆரிய சூழ்ச்சியே காரணம் என்பது அவரது அழுத்தமான வாதம். சாதி வேறுபாட்டையும் வர்க்க வேறுபாட்டையும் புகுத்திய ஆரியர் அவற்றை நீதிப் படுத்த "ஆன்மா என்றும் அழியாது",

"செல்வம் முற்பிறப்பில் செய்த நல்வினைப்பயன்", "சிறுமை முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன்", "தீ ஒரு தெய்வம்", "செம்புனல் தெய்வம்", "காற்று ஒரு தெய்வம்", "கருவெளி தெய்வம்", "நிலம் ஒரு தெய்வம்", "இந்திரன் தெய்வம்", எதற்கும் இறைவன் என்பன போன்ற கருத்துக்களையெல்லாம் பரப்பினர் என்பார். இதற்கெல்லாம் தமிழகம் வந்து தமிழ் பயின்ற அகத்தியன் மூலக் காரணமானான் என்று அவரது "அகத்தியன் விட்ட புதுக்கரடி" என்ற கவிதையில்,

இப்பிறப்பு முற்பிறப்பு இருவினை ஆன்மா
ஊழ் இவையனைத்தும் உரைத்த அகத்தியன் (ப.696`

என்று அகத்தியரை அறிமுகப்படுத்துவார்.

பாரதிதாசன் போற்றிய தமிழ் மரபுக் கெதிரான கருத்துக்களைப் பொதுவுடைமைக் கட்சியினர் கூறிய போது அவற்றைப் பாரதிதாசன் கண்டிக்கத் தயங்கவில்லை. பொதுவுடைமையரசை நிலை நாட்டிய உருசிய நாட்டை முதலில் பாரதிதாசன் பலபடப் பாராட்டியதுண்டு. ஆனால் திருமண வாழ்க்கை வேண்டாம் என்று பொதுவுடைமையர் கூறியதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

பெண்கள் பற்றி நீபேசும்
பேச்செல்லாம் முடை வீசும்
எண்ணங்கெட்ட உருசியனே?
ஏதுங்கெட்ட உருசியனே!
காமம் ஒழிக்கும் கலையம் என்றாய்
காதற்பெண்கள்' நிலை மறந்தாய்'
தாய்மை என்னும் பண்பு கொன்றாய்'
தலை கொழுத்தே கெடுகின்றாய்
ஒருவனுக்கு ஒருத்தி வேண்டும்
ஒருத்திக்கொருவன் வேண்டும்
இருவர் தாமும் ஒன்றுபட்டே
இன்பத்தை அடைய வேண்டும் (ப.1935)

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரைக் கொண்டிருக்கும்போது பொதுவுடைமை ஆட்சியில் உருசிய

மக்களின் அவல வாழ்வைச் சுட்டிக் காட்டினார். “வரிசை கெட்ட உருசிய நாடு”, உருசிய நாட்டுத் தொழிலாளி ஒருவன் பொதுவுடைமைத்தாள் ஒன்றில் புகன்றதைக் கவிதையாக்குகிறார்.

அந்த ஏழை மேலும் அலறினான்:
இந்த நாட்டில் இன்றியமையாப்
பொருள்கள் எல்லாம் போதிய அளவில்
இல்லா நாளில் குருசேவ் விளம்பர
நாடகம் ஆடுவது நல்லது தானா
கேடு செய்யாதா என்ற கேட்டான்
ரஷ்யத் தலைவர், சிஷ்யர் உணர்க!
அவனே மேலும் அறிவுறுத்துவான்
ஏவுகணை ஒன்றை இயற்றுதற்குச்
செலவிடும் பெருந்தொகை இருந்தால்
உலவும் ஏழைமக்களுக்கு உதவுமே (ப.1934)

சீனர் இந்தியாவின் மீது படையெடுத்தபோது “சீனமக்களுக்கேற்பட்ட ஒரு நோய் சூயென்லாய்” (ப.1989) என்று பாடினார். சீனப் பொதுவுடைமைக் கொள்கைக்கு ஊறு செய்துவிட்டானே என்று வருந்தினார்.

“பொதுவுடைமைக் கொள்கை ஒன்று
 பூத்துக் காய்த்து வருமின்று
பொதுவுடைமை எனக்கென்று
 புகன்றாயே குறுக்கில் நின்று” (ப.533)

என்று பாடினார்.

சீனருக்கும் இந்தியருக்கும் ஏற்பட்ட போரில் இந்தியா வெல்லவேண்டும் என்று இந்திய வீரர்களை ஊக்கும்வண்ணம் கவிதைகள் எழுதினார்.

“ஊராசையால் வந்தான் - அவன்
உண்மையை மறந்தான்
சீரழிந்தான் கள்ளன் - அந்தச்
சீனாக்காரக் குள்ளன்

இமயத்துக்கே வெற்றி - யாம்
குமரிக்கு நல் வெற்றி!
கமழும் காவேரிக்கும் - நற்
கங்கைக்குமே வெற்றி!'' (ப.1988)

சீன இந்தியப் போரின்போது ஒன்றுபட்ட இந்தியாவின் பொதுக்குரலை அவர் அச்சமயத்தில் எழுதிய கவிதைகளில் காணலாம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அத்து மீறியபோதெல்லாம் அதன் செயல்களையும் அவர் கண்டித்துக் கவிதைகள் யாத்தார். இரண்டாம் உலகப்போரின்போது கிரோஷ்மா, நாகசாகி எனும் இரு ஊர்களில் அமெரிக்கர்கள் வெடிகுண்டு வீசி அழித்தபோது,

''இன்னம் ஓர் நூற்றாண்டுக்கும்
இரண்டு ஊரின் சுற்றுப்பக்கம்
ஒன்றுமே முளையாதாமே
வாழ்தலும் ஒண்ணாதாமே;
ஒன்றுகேள், முதலாளித்துவம்
உலகினை அழிக்கும் முன்னம்
நன்றுநாம் செய்தல் எல்லாம்
நாமதை ஒழித்தல் வேண்டும்

. . . . . . . . . . .

ஜப்பானில் வீழ்ந்த குண்டு
சர்வாதிகார ஆட்டம்
இப்பாரை இனிக் கலக்கி
இனிவருங்காலம் இன்றி
தப்பாது செயினும் செய்யும்
தறுதலை முதலாளித்துவம்
எப்போதும் தமைவிடாது
செய்வன இன்றே செய்க' (பக். 1965 - 66)

நாற்பதுகளிலேயே அமெரிக்க அரசை இவ்வாறு கண்டனம் செய்த கவிஞர். பின்னாட்களில் அது வியட்நாமில் குண்டுவீசியபோதும் கடுமையாக எச்சரிக்கை செய்தார்

"மனவலிமை குன்றாத வியத்நாம் மக்கள்
மறுவாழ்வில் ஊடுருவும் முதலாளித்துவ
மனப்போக்கை முறியடித்தல் உலக நாட்டு
மன்றத்தின் முதல் கடமை ஆகும், ஒவ்வோர்
இனமக்கள் வாழ் நாடும் அவ்வவர்க்கே
எனும் உணர்வு விழிப்புணர்ச்சி இயற்கை; எந்த
இனமற்ற அமெரிக்க வெறிநாய்கட்கே
இனமேது? ஏது மொழி, எச்சில்சோறே
அமெரிக்கக் காலடியில் வியத்நாம் மக்கள்
ஆயிரம் ஆண்டானாலும் பணிவதில்லை;
திமிருற்ற ஏகாதிபத்தியத்தைத்
திசைதோறும் எதிர்க்கிறார்." (ப.1967)

பொதுவுடைமைச் சமுதாயத்தைப் போற்றிப் புகழும் பாரதிதாசன் ஒவ்வோர் இனமும் அதற்குரிய மொழி, பண்பாடு ஆகியவற்றில் பற்றுடன் செயல்படுவதை ஆதரித்தாரேயன்றிக் குறையாகக் கருதினார் அல்லர் என்பதையும் இக்கவிதையி லிருந்து உணரலாம்.

தமிழ், தமிழர், தமிழகம் பற்றிக் கணக்கின்றிக் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தபோதும் உலக நாடுகளின் போக்கையெல்லாம் விழிப்புணர்வோடு கவனித்துக் கொண்டிருந்தார். தொழிலாளர்கட்கு ஆதரவான நிகழ்ச்சிகளைப் பாராட்டி வரவேற்றும் ஏகாதிபத்திய வெறியைச் சாடியும் அவர் எழுதிய கவிதைகளில் 'குடியானவன்' குறிப்பிடத்தக்கது. வையப்போரில் ரஷ்யாவை ஜெர்மனி தாக்கத் தொடங்கியபோது குடியானவர்கள் தம் பொறுப்புணர்ந்து செயல்பட்டதை அவர் வியந்து பாடிய கவிதை இது. இட்லரின் பேராசையையும் இறுதியையும் இதில் அழகுறப் பாடுகிறார். ருஷ்யாவின் ஆற்றலைப் புகழ்கிறார். குடியானவனின் கடமை உணர்வு மனிதநேயம் அவர் உள்ளத்தை நிரப்புகிறது.

"பெல்ஜியம் போலந்து முதல் நல்ல நாடுகள்
பலவும் அழித்துப் பல்பொருள் பெற்றான்
முடியரசு நாடு, குடியரசு கொள்கை

முடியும் என்பதை முடித்த பிரான்சை
வஞ்சம் சூழ்ச்சியால் மடக்கி ஏறி
அஞ்சாது செல்வம் அடியொடு பறித்தான்;
இத்தாலி சேர்த்தே இன்னல் சூழ்ந்தவன்
கொத்தாய் ஆசியாக் கொள்கையை நாடும்
ஜப்பான் போக்கையும் தட்டிக் கொடுத்தான்;
ஆங்கில நாட்டையும் அமெரிக்காவையும்
எரிக்க நினைத்த இட்லர் என்னும்
குருவி நெருப்புக்குழியில் வீழ்ந்தது
. . . . . . . . . . . . .
பெரிதினும் மிகவும் பெருநிலை கண்ட
உருசிய நாட்டை ஒழிக்கச் செலுத்தினான்;
மக்கள் வாழ்வின் மதிப்பு இன்னதென
ஒக்க வாழும் உறுதி இதுவென
முதிய பெரிய முழு நிலத்திற்கும்
புதியதாகப் புகட்டிய நாட்டில்
செலுத்தினான்; இட்லர் தீர்ந்தான்; முற்றிற்று". (பக்.240-241)

ருசிய நாட்டை விட இக்கவிதையில் கவிஞரின் சிந்தனையை மகிழ்விப்பது போரிட முடிவு செய்யும் குடியானவனின் முடிவே.

"மெத்தை வீடு", மென்மை ஆப்பிள்
முத்தரிசி, பாலில் முழுங்கிய சோறு,
விலைதந்து தன்புகழ் விதைக்கும் ஆட்கள்,
இவற்றினின்றுதான் இன்பமும் அறமும்
துவங்கும் என்று சொல்லல் பொய்ம்மை
இதை அவன் கண்டதில்லை; ஆயினும்
அக்குடியானவன் எழுந்தான்
நிற்கவில்லை; நிறைந்தான் போரிலே! (ப.242)

பாரதிதாசனின் ஏனைய கொள்கைகளைப்போலவே, பொதுவுடைமைக் கொள்கைக்கும் அவரது ஆசான்கள் பாரதியும் பெரியாருமே. மார்க்ஸ், லெனின், சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோர் பற்றி ஆங்காங்கே தம் கவிதைகளில் சிறப்பித்துச் சில வரிகள் பாடுகின்றாராயினும் அவர் தமக்கென

வகுத்துக்கொண்ட சுயமரியாதை பொதுவுடைமைப் பாதையில் வழிகாட்டிகளாய் அமைந்தவர்கள், வழி காட்டிகளாய் அவர் முழுமனத்துடன் ஏற்றுக்கொண்டவர்கள் பாரதியெனும் கவிஞரும் பெரியார் எனும் சமுதாயப்புரட்சியாளருமே என்பதில் ஐயமில்லை. "மூலதனத்தின் பொருள் புரிந்ததும் அவனால், புதுவுலகக்கனா முளைத்ததும் அவனால்" (ப.1766) என்று சிங்காரவேலரைப் பாராட்டுகின்ற அவர் இன்னொரு கவிதையில்,

"சிங்காரவேலா முதல் சீவா வரையில்
அங்காந்திடுவர் என் பாட்டினுக்கே" (ப.1945)

என்பார். ஆனால் தாம் பொதுவுடைமைக்காகச் செய்த தொண்டைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத்தீ
என்றன் பாட்டு நெய்யால் வளர்த்து
கொழுந்து விட்டெரிந்து தொழிலாளரிடத்தும்
உழைப்பாளரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்
மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரே?" (ப.1944)

என்று கேட்பார். பாரதியைப் புகழும்போதெல்லாம் அவனை உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப் புதுநெறிகாட்டிய புலவனாக (192) மட்டும் பார்க்காமல் சமுதாயச் சீர்திருத்தவாதியாகவும் பார்க்கின்றான். "புதிய அறம்பாடவந்த அறிஞன்", நாட்டில் படரும் சாதிப்படைக்கு மருந்து, மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன், அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கு அவன்" (194) என்றும் கூறுகிறார்.

"அகத்திலுறும் எண்ணங்கள், உலகின் இன்னல்
அறுப்பவைகள், புதியவைகள், அவற்றை
யெல்லாம்
திகழ்பார்க்குப் பாரதியார் எடுத்துச் சொல்வார்
தெளிவாக, அழகாக, உண்மையாக (202)

என்றும்

நாட்டில் பல்லோர்
பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசு கின்ற
மோசத்தை நடக்கையினால், எழுத்தால், பேச்சால்
முரசறைந்தார், இங்கிவற்றால் வறுமை ஏற்றார்'' (204)

என்றும் பாரதியின் செம்மைநலம் பேசுவார். எழுத்தாளர்கள் நடக்கையினால் எழுத்தால், பேச்சால் வர்க்கப்போர்க்குத் துணைசெய்யவேண்டும் என்பது கிறிஸ்டபர் கால்டுவெல் (Christopher coldwell) போன்ற மார்க்கியத் திறனாய்வாளர்களின் கருத்து. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு தம்மை இணைத்துக்கொண்ட பாரதிதாசன் அவர் காட்டிய பாதையில்தான் பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு வழி இருக்கிறது என்று நம்பினார். அன்னாரைப் புத்தர், வள்ளுவர் வரிசையில் வைத்துப் பேசினார்.

''மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்சகர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும்படையின் தொகுப்பு;

. . . . . . . . .

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்!

தமிழர் தவம் கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலை மேடை
நமக்குத் தாண்டி வந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை!

என்றெல்லாம் பாராட்டி மகிழ்ந்தான். அவரின் கொள்கைகளைப் பரப்புதலையே தமது வாழ்வின் நோக்காகக் கொண்டார். பின்னால் வந்த திராவிடக் கட்சிகளின் தலைவர் யாரிடத்தும் அவர் இத்தகைய அன்பையும் மதிப்பையும் வைக்கவில்லை.

பாண்டிச்சேரி அரசியலில் நுழைந்த பிறகு பொதுவுடைமைக் கட்சிகளோடு மோதல் ஏற்பட்டபொழுதெல்லாம் பொதுவுடைமைக் கோட்பாட்டைக் குறை கூறாமல் அக்கட்சிகளின் தலைவர்களையே தாக்கினார். மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் இனப்பற்றும் பொதுவுடைமைக் கொள்கைக்கு முரண்பாடானவை என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

"இவர்கள் யாரென எனக்குத் தெரியும்
புரட்சியின் பேரால் புரட்டு செய்பவர்கள்
தொழிற்சங்கத்தில் தோழர்கள் உழைப்பை
வழிப்பறி செய்யும் வல இடசாரிகள்;
தாய்மொழிப் பற்றும் தன் இனப்பற்றும்
தாய்நாட்டுப் பற்றும் சற்றும் இலாதவர்;
முடிந்த வரைக்கும் முந்நூல் கொள்கையில்
அடிதொழுதிருக்கும் அடிமைகள், மார்க்சு லெனின்
நூல்களையெல்லாம் நுனிப்புல் மேய்ந்து
கால்படித் தமிழால் மேற்படியாரின்
விளக்கெண்ணெய் மொழியால் விளங்காது
செய்பவர்;. (1945)

ஆரிய திராவிட இனப்போரை வர்க்கப் போராட்டத்தின் மாற்றுருவமாகக் கண்ட பெரியார் கம்யூனிஸ்டுகளோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டபோதெல்லாம் இனப்போரின் முதன்மையையே விதந்து கூறி கம்யூனிஸ்டுகளை அரிய அடிவருடிகள் என்று தாக்கியதைப் பாரதிதாசன் கவிதை மொழியில் கூறினார். இந்தியாவில் பொதுவுடைமைக் கொள்கை வெற்றி பெறாமல் போனதற்கு அக்கட்சித்தலைவர்களே காரணம் என்பது அவரது குற்றச்சாட்டு. அவர்களால்தான்,

"குறிக்கோள் உயர்ந்த பொதுமைக் கொள்கை
வெறிச்சென்று போனது; வெற்றியில் தாழ்ந்தது;
பாட்டாளிகளின் கூட்டம் குறைந்தது,
மூட்டிய போர்க்குணம் முடம் கொண்டொழிந்தது
கண்டிதனைக் கழறுவதாலே அறிவிலா
முண்டங்கள் எனை முழுக்க முழுக்க
பொதுவுடைமைக்கெதிரி என்று முழக்குவர்" (1945)

என்று அவர்களைக் கடுமையாகத் தாக்கினார்; ஏசினார்.

பாரதிதாசனார் தமிழகம் எங்கும் சுயமரியாதை இயக்கப் பிரச்சாரத்திற்கும் பொதுவுடைமைத் தத்துவப் பிரச்சாரத்திற்கும் துணைசெய்யும் கவிதைகளை வாழ்நாள் முழுவதும் எழுதி வந்தார். இதனைத் திராவிடக் கட்சிகள் பயன்படுத்திக் கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கட்சித்தலைவர்தம் கட்சிக்குழந்தை
தொட்டில் ஆட்டப் பாடிய பாட்டும்
வளர்க்கப் பாடி வந்த பாட்டும்
என் பாட்டாகும்!" (ப. 2015)

இப்பாடல்களையெல்லாம் திராவிட இயக்கத்தார் தம் எழுத்திலும் பேச்சிலும் கையாண்ட அளவிற்குப் பொதுவுடைமைக் கட்சியினர் கையாளவில்லை. ஆனால் ஆரிய, திராவிட இனச்சிக்கல் பற்றிய பாரதிதாசனின் கவிதைகளிலும் அவர் உழைப்பின் உயர்வு, தொழிலாளரின் இன்றைய இழிநிலை, அவர்கள் இணைந்து நின்று போராட வேண்டியதன் அவசரத் தேவை ஆகியவை பற்றி எழுதிய கவிதைகள் அளவில் மிகுந்தவை, தரத்தில் உயர்ந்தவை. அவரது தொழிலாளர் பற்றிய கவிதைகளோடு தமிழினம், தமிழகம், தமிழ் ஆகியவை பற்றிய கவிதைகளையும் சேர்த்துப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக்கொண்டதும் திராவிடக் கட்சிகளின் பெரும் வெற்றிக்கு ஒரு காரணமாகும். கொள்கை அளவில் இதனை முரண்பாடாகக் கருதிய பொதுவுடைமைக் கட்சிகள் அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள இயலாமல் போனதும் தமிழகத்தில் அவர்களுக்கேற்பட்ட சரிவிற்கான காரணங்களில் ஒன்றெனக் கருதலாம். திராவிடக் கட்சிகள் தாமே பொதுவுடைமைக் கோட்பாட்டின் உண்மையான காவலர்கள் என்று காட்டிக்கொள்ள பாரதிதாசனின் கவிதைகள் அருந்துணை ஆயின என்பதில் ஐயமில்லை.

பாரதிதாசனின் கவிதைகளை மார்க்சியக் கண்ணோட்டத்தில் அணுகும்போது சில உண்மைகள்

தெளிவாகின்றன. அவர் தமது கவிதைகளில் பொதுவுடைமைக் கோட்பாட்டைச் சுயமரியாதை, திராவிட இயக்கங்களின் வளர்ச்சிக்கு அழகுறப் பயன்படுத்திக்கொண்டார். தொழிலாளர் மேம்பாடு என்னும் பாடுபொருள் அவரது கவிதைகளில் பலவற்றிற்குப் பெரும் ஆற்றலைச் சேர்த்து அவை மேடைதோறும் முழங்கப்படுவதற்குக் காரணமாயிற்று. தமிழின் சிறப்புப்பற்றி அவர் பேசும் கவிதைகளைப் போலவே தொழில் உயர்வு பற்றிப் பேசும் கவிதைகளும் வெற்றிபெற்றன. அவை அவர்க்கு உலக அரங்கில் மார்க்சியம் பேசியப் பெருங்கவிஞர்களின் அணியில் ஒரு நிலைத்த இடத்தைப் பெற்றுத் தரும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதற்குத் துணைசெய்ய வேண்டியது பாரதிதாசனின் கவிதைகளை மொழி பெயர்ப்பாரின் முதற்கடமையாகும்.

# நிறைவுரை

**கவிஞர் பொன்னடியான்**

ஒரு,
புல்முனை அளவான தீப்பொறி கிடைத்தாலும்
பூமிக்கு ஒளியூட்டுவேன்!

சிறு,
நெல்மணி கிடைத்தாலும் அதையேநான் விளைவாக்கி
நிலமக்கள் பசிபோக்குவேன்!

பெருமைக்குரிய இக்கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கும் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறைத்தலைவர், பேராசிரியர், முனைவர் கி. அரங்கன் அவர்களே! மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கதிர் மகாதேவன் அவர்களே! பாண்டிச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் முனைவர் ப. மருதநாயகம் அவர்களே! மொழிபெயர்ப்புத்துறையின் இணைப் பேராசிரியர் தலைவர் மதிப்புமிகு முனைவர் ச. இராதாகிருட்டிணன் அவர்களே! சிறந்த மக்கள் தொண்டர் - கவிதை இலக்கியச் சுவைஞர் எனும் பெருமைகளுக்குரிய மதிப்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உபயதுல்லா அவர்களே! வருகை தந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களே! ஆய்வுச் செல்வர்களே! வணக்கம்.

என் வாழ்நாளில் மகிழ்ச்சிக்குரிய சில நாட்களில் இந்த நாளையும் குறிப்பிடத்தக்க ஒரு நாளாக இணைத்துக் கொண்டுள்ளேன்.

காலை முதற்கொண்டு பல அறிஞர்கள் - மொழி

பெயர்ப்புத்துறை வல்லுநர்கள் அரிய கருத்துரையை- ஆய்வுரையை வழங்கி வழிகாட்டியுள்ளனர்.

## அரிய கலை

உலகில் உள்ள கலைகளில் அரிய ஒரு கலையாக மொழிபெயர்ப்புக் கலையை நான் கருதுகிறேன். உலகம் தோன்றிய நாள்முதல் இந்தக் கலையே மனித உறவுகளை - மனிதநேயத்தை வளர்த்து, மனித சமுதாயத்தை வளர்த்து உதவிபுரிந்திருக்கிறது என்று கூறுவது சரியானதாக இருக்கும் என்று நான் நம்புகின்றேன். மாமன்னர்களின், பேரரசுகளின் வீழ்ச்சிக்கும், வெற்றிகளுக்கும் காரணமான இக்கலை நுட்பமான, அறிவுத்திறன் மிக்க பன்மொழி அனுபவம்மிக்க, வாழ்வியலைச் சரியாக எல்லாக் கோணங்களிலும் உணர்ந்து இரசிக்கும் திறன்மிக்க அறிஞர்களின் கலை என்று சொன்னால் பொறுத்தமானதாக இருக்கும்!

## பெரும் பொறுப்பு

இக்கலையில் வல்லார் உலக வரலாற்றுத் திருப்பங்களுக்கும் காரணமானவர்களாக இருந்திருக்கிறார்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மனித சமூகத்தில் புரிந்துணர்வை ஊட்டும் நல்லிணக்கத் தூதுவர்களாக - வரலாற்றுக் குறிப்புகளின் காவலர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பது அறிஞர் உலகம் அறிந்த ஒன்று.

அந்த அரிய கலையின் - மொழிபெயர்ப்புக் கலையின் நாயகர்களான உங்களுக்கு, உங்கள் தாய்மொழியை, அம்மொழி சார்ந்த கலையை - பண்பாடுகளைக் காக்கும் பெரும் பொறுப்பு உண்டு.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்- கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"

என்று பாடி நமக்கு ஆணையிட்ட விடுதலைக் கவிஞர் பாரதியின் விருப்பப்படி, உலக இலக்கியங்களை - உலக

மாமனிதர்களின் சிந்தனைகளை, விருப்பங்களைச் சிதைவுறாமல் தமிழில் குழைத்துத் தந்து, தமிழர் தலைநிமிர வைக்கும் பெரும் பொறுப்பும் உங்களைச் சார்ந்திருக்கிறது.

## கவிஞராக மொழிபெயர்ப்பாளர்

மொழிபெயர்ப்புக் கலையில் ஒரு கவிஞனின் கவிதைகளை அதன் உயிர்ப்புக் கெடாமல் - உணர்ச்சி கெடாமல் மொழிபெயர்ப்பது என்பது அரியவொரு செய்லாகும். ஒருவரின் கட்டுரையை - உரையை மொழிபெயர்ப்பது என்பது எளிதானது அதே நேரத்தில் ஒரு மொழிக் கவிதையை மற்றொரு மொழியில் மொழிபெயர்ப்பவர் குறைந்தபட்சம் ஒரு கவிஞராக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. அப்படி இல்லையென்றால், சிறந்த கவிதைச் சுவைஞராகவேனும் அவர் இருக்கவேண்டும். அத்தகுதியும் இல்லையென்றால், அந்த மொழிபெயர்ப்பாளர் கவிதைகளை மொழபெயர்க்கும் போதாவது ஒரு நல்ல கவிஞரைத் துணைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோள்.

## மொழிபெயர்ப்புப் பணியில் "முல்லைச்சரம்"

கடந்த 34 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் என் பத்திரிகை, தொடர்ந்து மொழிபெயர்ப்புக் கலைக்கு ஊக்கமளிக்கும் வகையில் இன்றுவரை தொண்டாற்றி வருகின்றது. கவிதை இலக்கிய ஏடாக 28 ஆண்டுகளாகவும், பல்சுவை ஏடாக 6 ஆண்டுகளாகவும் மலர்ந்து மணம் வீசி வரும் 'முல்லைச்சரம்' இந்திய இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்த பல மொழிக் கவிஞர்கள், எழுத்தாளர் படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது இன்றுவரை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

"அணையாப் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர்கள்" என்ற தலைப்பில் என் துணைவியார் திருமதி இந்திரா பொன்னடி, புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர்கள் - வரலாறு அவர்களின்

சிறந்த படைப்புகளுடன் தமிழில் மொழிபெயர்த்து "முல்லைச்சரத்தில்" தொடர் கட்டுரையாக எழுதி வந்தார். அது வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

## பெருஞ்சுவருக்குப் பின்னால்

அதேபோல், முனைவர் கவிஞர் வான்முகில் அவர்கள் (பாரதிதாசனும் கிளாடு மெக்கே என்ற கறுப்பு அமெரிக்கக் கவிஞனும் என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்) ரஸ்ய, பிரஞ்சு, ஜெர்மன், சீனம், ஆங்கிலம் என்ற பல மொழிகளிலும் வரலாறு படைத்த பேரெழுத்தாளர்கள், பெருங்கவிஞர்கள் படைப்புகளை எல்லாம் மொழிபெயர்த்து இன்றுவரை 'முல்லைச்சரம்' வாசகர்களுக்கு அளித்து வருகிறார். அதில் குறிப்பாக வரலாற்றுப்பெருமையும், பழம்பெருமையும் உடைய சீனக் கதைகளை - கவிதைகளைப் பெருஞ்சுவருக்குப் பின்னால்- என்னும் தலைப்பில் தொடர்ந்து மொழிபெயர்த்துச் சாதனை படைத்துள்ளார்.

## ஏன் குறிப்பிடுகின்றேன்?

இதை இங்கே எதற்குக் குறிப்பிடுகின்றேன் என்றால், மனித சமுதாயத்தின் ஒற்றுமையை - நல்வாழ்வை - முன்னேற்றத்தை நாடுகின்ற எந்தக் கவிஞனும் - படைப்பாளனும் உலக மக்களின் இதயங்களை ஒருங்கிணைக்கும் பாலங்களான மொழிபெயர்ப்புக் கலையை விரும்புவான் - போற்றி வளர்ப்பான் - அந்த வழியில் ஒரு கவிஞனாக அதுவும் பாரதி - பாரதிதாசன் வழிக் கவிஞனான நானும் என்னால் முடிந்தவரை - செயல்பட்டு வருகின்றேன் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே!

## வெறும் மொழிபெயர்ப்பே

இன்னொரு முக்கியமான கருத்தையும் உங்கள்முன் வைக்க விரும்புகிறேன். இந்நாளில் பல தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் **செய்யப்**

பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் பல மொழி பெயர்க்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் பாரதிதாசன் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பாக - ஆங்கில உரைநடை மொழிபெயர்ப்பாகத்தான் என் சிற்றறிவுக்குப் படுகிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த மூலக்கவிதைகளின் பொருளுக்கு எதிர்மறையான பொருள்கூறும் மொழிபெயர்ப்புகளாகவே உள்ளன. இது தொடர்பான சில சான்றுகளை - உங்கள்முன் மொழிபெயர்ப்புக்கலையின் வித்தகர்களாகிய உங்கள் முன் வைத்து என் மன உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

மேலும், நான் இப்படிக் கூறுவதன்மூலம் எவரைப் பற்றியும் குறைகூறுவது என்பது இங்கே என் நோக்கமில்லை. இத்துறையில், இக்கலையில், இனி வருங்காலங்களில் எவ்வளவு எச்சரிக்கையாக நாம் முன்னேற வேண்டும் - முத்திரை பதிக்க வேண்டும் என்பதே என் தலையாய நோக்கமாக உள்ளது.

### எது சக்தி?

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் முதல் கவிதை, அதாவது, மகாகவி பாரதியார் 'பாடு' என்று ஆணையிட்டவுடன் அறிஞர்கள் முன் அவர் பாடிய புகழ்பெற்ற கவிதை "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற கவிதை.

> எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி
> ஏழுகடல் அவள் வண்ணமடா!

என்று அக்கவிதை தொடங்குகிறது. இந்த வரிகளை

> "Wherever you see is only Sakthi-Hail to brother
> The Seven seas embody her harmoney of colour"

என்று அந்த ஒரு நூலில் மொழிபெயர்த்துள்ளனர். இங்கே,

பாவேந்தர் கூறும் 'சக்தி' என்ற சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் சேர்த்துள்ளனர். சக்தி என்ற சொல் சமஸ்கிருதச் சொல். ஸக்தி என்ற அச்சொல் தமிழில் சக்தியாகவும் பிற இந்திய மொழிகளில் க்ஷக்தியாகவும் வழங்குகின்றது. இந்தச் சக்தி என்ற சொல்லின் பொருள் என்னவென்று ஆங்கிலத்தில் படிக்கும் பிறமொழியினர் அறிய வாய்ப்பில்லை. இன்னும் சொல்லப்போனால், பாவேந்தர் பாட்டில் சொல்லப்படும் சக்தி என்ற சொல் ஆழமான உட்பொருள் பொதிந்த சொல்லாகும்.

நிலநதி நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம். ஆதலின் ... !

என்று தொல்காப்பியர் கூறுவார். அந்தப் 'பஞ்சபூதங்கள்' என்று உலக வழக்கில் மக்களால் கூறப்படும் ஐந்தினுள்ளும் நீக்கமற நிறைந்திருக்கும் பேராற்றலைப் பாவேந்தர் கூறுகிறார். அந்த ஐந்தின் வெளிப்பாடான அணுசக்தியும் பாவேந்தரின் சக்தி என்ற சொல்லில் அடங்கும். நீரிலிருக்கும் பல சக்திகளில் ஒரு சக்தி மின்சார சக்தி. தவிட்டில் உள்ள பல சக்திகளில் ஒரு சக்தி எண்ணெய். குப்பைகளில் - கழிவுகளில் இன்று கண்டுள்ள சக்தி மின்சார சக்தி. இப்படி எங்கும் எதிலும் நிறைந்துள்ள மகா சக்தியைத்தான் பாவேந்தர் குறிப்பிடுகின்றார். அந்த ஆழமான பொருள் புதைந்த அறிவியல் சொல்லை ஆங்கிலப்படுத்தும்போது விரிவான பொருள் புதைந்த சொல்லைத் தேர்ந்தெடுத்திட முடியாவிட்டாலும் "Atomic Power" போன்ற சொல்லையாவது பயன்படுத்தி இருக்கலாம். அடிக்குறிப்பாக விளக்கம் கொடுத்திருக்கலாம் என்பது என் கருத்து.

## அழகில் ஒரு அலசல்

இதேபோல் இன்னொரு கவிதை மொழிபெயர்ப்பில், அதாவது "அழகு" என்ற புரட்சிக்கவிஞர் கவிதை மொழிபெயர்ப்பில்,

* சிறுகுழந்தை விழியினிலே
ஒளியாய் நின்றாள்!

* திருவிளக்கில் சிரிக்கின்றாள்!
நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின்
விரல்வளைவில்

* நாடகத்தைச் செய்கின்றாள்!
அடடே செந்தோள்
புறத்தினிலே கலப்பையுடன்
உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்,
விளைந்த நன்செய்

* நிறத்தினிலே என் விழியை
நிறுத்தினாள், என்
நெஞ்சத்தில் குடியேறி
மகிழ்ச்சி செய்தாள்!

என்று அக்கவிதை தொடர்கிறது. இதில் சிறு குழந்தை என்பதற்கு 'Child' என்ற சொல்லைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். குழந்தை என்பதற்கு அச்சொல்லைப் பயன்படுத்தினால் சரி. ஆனால், பாவேந்தர் சிறுகுழந்தை என்றல்லவா கூறுகிறார். அதாவது கள்ளங்கபடறியாப் பச்சைக் குழந்தைச் சிரிப்பைப் பாவேந்தர் படம் பிடிக்கிறார். அதில் அழகு மங்கை நடமிடுகிறாள் என்பது அவர் கற்பனை. இலாப நட்டக் கணக்கில் சிரிக்கக் கற்றுக் கொள்ளாத பச்சைக்குழந்தை என்ற அவரின் கற்பனைக்கேற்ற சொல்லாக 'kid', 'Baby', 'Ward', 'Tender' -போன்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாமே என்பது என் விருப்பம்!

## புனித விளக்கா?

இதேபோல் அதே பாட்டில் அழகுமங்கை திருவிளக்கில் சிரிக்கின்றாள் என்று உருவகித்துப் பாடுகின்றார். இதை மொழிபெயர்க்கும்போது "She smiles in the holy lamp" என்று ஆங்கிலப்படுத்தியுள்ளனர். இன்னொரு மொழிபெயர்ப்பாளர் அவர் நூலில் "Temple Lamp" என்று ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

பாவேந்தர், பக்தர் கூறும் பாவ புண்ணியத்தைப் பற்றிக் கவலைப்படாதவர் - கடவுளையும் - கோயில்களைப் பற்றியும் கவலைப்படாதவர். ஏன், அவைகளைக் காட்டித்தான் ஏழைமக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள் - அவைகளைக் காட்டி- - சொல்லிப் பயமுறுத்தித்தான் 'வலியோர் சிலர் எளியோர்தமை வதைபுரிந்தனர்' என்பது பாவேந்தர் கோபம். அதனால்தான் - ஏழைகள்

"பா திக்குதே பசி என்றுரைத்தால் - செய்த
பாவத்தைக் காரணம் காட்டுவார்! - மத
வாதத்தை உம்மிடம் நீட்டுவார்! - பதில்
ஓதிநின்றால் படைகூட்டுவார்"

- என்று தன் 'பலிபீடம்' பாட்டிலே குமுறி, ஏழைகளுக்கு விழிப்பூட்டுவார், அந்தப் பாரதிதாசன் , எப்படிப் புனித விளக்கை - புண்ணிய விளக்கை, கோயில் விளக்கைப் பற்றிக் கவலைப்படுவார்? அவர் பாடியதெல்லாம் குடும்பவிளக்கைப் பற்றித்தானே. அதனால்தான் அழகான (திரு) விளக்கில் (குடும்பவிளக்கில்) அழகு மங்கை சிரித்தாள் என்ற அவரின் கொள்கை வழியிலான கற்பனையை உணர்ந்து மொழிபெயர்த்திருக்க வேண்டும் என்பது என் ஆசை.

## நாடகமா - நாட்டியமா?

அதே கவிதையில் நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில் நாடகத்தைச் செய்கின்றாள் (அழகு மங்கை) என்று பாவேந்தர் பாடுகின்றார்.

இக்கவிதை வரிகளை

"A dance in the game of the fingers
of the lass who waves a garland"

என்று ஆங்கிலப்படுத்தியுள்ளனர். நாரெடுத்து நறுமலரைப் பூமாலையாக - பூச்சரமாகத் தொடுப்பவளின் விரல் அசைவில் அழகுமங்கை ஒரு நாடகமே (கூத்து) நடத்துகின்றாள் என்பது

பாவேந்தர் கற்பனைத்திறன். இதனை 'dance' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி நாட்டியமாக்கியுள்ளனர். நாடகம் - கூத்து என்பது வேறு -- நாட்டியம் என்பது வேறு அல்லவா? இரண்டு கலைக்கும் இடையில் உள்ள நுட்பமான வேறுபாடுகளின் அடிப்படையில் அறிஞர் - குறிப்பாக மொழிபெயர்ப்பு அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று பணிவோடு வேண்டுகின்றேன். இதைவிட மேலான ஒரு பிழையும் நடந்துள்ளது. ஆம், பதினொரு அறிஞர்கள் சேர்ந்து - உழைத்து வெளிவந்துள்ள அந்த நூலில் நிகழ்ந்துள்ளது.

## இலக்கணப்பிழை

அதாவது, அதே கவிதையின் கடைசி வரியில் "விளைந்த நன்செய் நிறத்தினிலே என் விழியை நிறுத்தினாள், என் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்"! அழகுமங்கை என்று முடித்திருப்பார். சிறு என்று தொடங்கிய இந்த எண்சீர் விருத்தத்தில் நான்கு அடிகளுக்கும் சிறு, நறு, புற, நிற என்று நான்கு எதுகைகளைப் பயன்படுத்தியிருப்பார். பாவேந்தர், இதை மொழிபெயர்ப்பாளர்கள் 'விளைந்த நன்செய் நிறத்தினிலே' என்பதைச் சிதைத்து 'விளைந்த நன்செய் நிலத்தினிலே' என்று பிழையான எதுகை சேர்த்துப் பொருள் மாற்றி மொழிபெயர்த்திருக்கிறார்கள். கவிஞர் கண்களுக்கு விளைந்த நன்செய் நிறம்தான் (பொன்மணிக் கதிர்கள்) தெரிகின்றது. வெறும் நிலத்தைப் பெரிதுபடுத்தி அதில் அழகுப் பெண் சிரிக்கின்றாள் என்று கற்பனைத் திறன்மிக்க புரட்சிக்கவிஞர் எப்படிப் பாடுவார்? அவர் விளைந்த (நிலத்தின்) பொன்மணிக் கதிரின் அழகுமங்கை என்னை - என் கண்களைக் கவர்ந்தாள் என்று பாடிய கற்பனையையும் சிதைத்து - இலக்கணத்தையும் சிதைத்த கொடுமை நடந்துள்ளது! இப்படிப்பட்ட மொழிமாற்றக் கொலைகள் வருங்காலத்தில் களையப்படவேண்டும் என்ற ஆசையில்தான் அறிஞர் பெருமக்களாகிய உங்கள் முன் இக்கருத்துகளை வைப்பது என் கடமை எனக் கருதுகிறேன். இரண்டு பாடல்களிலேயே இத்தனைக் குளறுபடிகள் என்றால் மற்ற கவிதைகளையும் ஆராயப்புகுந்தால் இன்னும் ஏராளமான

சிக்கல்களை - கவிதைக் கருத்து - இலக்கணச் சிதைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

## வாழ்க்கைப் போக்கை ...

மொழிபெயர்க்கும் கலை, அதிலும், கவிதையை மொழிபெயர்க்கும் பணி மிகவும் நுணுக்கமாக, ஆய்ந்தறிந்து செய்யப்படவேண்டிய பணி என்பதை முன்பே உங்களுக்கு நான் தெரிவித்தேன் - அதில் ஒரு கவிஞனின் கவிதைகளைப் படைப்புகளை மொழிபெயர்ப்போர் முதலில், அந்தக் கவிஞனின் வாழ்க்கைப் போக்குகளை - கொள்கை நோக்குகளைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அடுத்து, அந்த மொழிபெயர்ப்பாளர்கள் தாம் மொழி பெயர்க்கும் படைப்புகளின் மொழியின் கவிஞனாகவோ அல்லது கவிதைச் சுவைஞனாகவாவது இருக்க வேண்டும் என்பவை என் கொள்கை.

## திரைஉலகில் மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பு என்று வரும்போது திரை உலகிலும் இக்கலை தொடர்பு கொண்டுள்ளது என்பது நீங்கள் அறிய வேண்டிய ஒன்று. தமிழ் உலகில் பிறமொழிப் படங்களைக் குறிப்பாகத் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற படங்களைத் தமிழில் மொழிமாற்றம் 'Tubbing' செய்கின்றனர். அந்தப்படத்தின் பாடலும் இசைக்கேற்பத் தமிழ்ப்பாடலாக மொழிமாற்றம் செய்யப்படுகின்றது.

நான், முன்பே பல்வேறு படங்களுக்கு மக்களுக்கு அறிமுகமான பல பாடல்களை எழுதியுள்ளேன் என்பது நீங்கள் அறிந்ததே - இதில் பலமொழிமாற்றுப் படங்களுக்கும் பாடல் எழுதியுள்ளேன். 'இலட்சியப்போராட்டம்' 'சாகசக்காரன்' 'மாயமோகினி' போன்ற படங்களுக்கு தெலுங்கிலிருந்து தமிழில் மொழிமாற்றம் செய்து பாடல் எழுதும்போது நான் புதிய வழிமுறையைக் கையாண்டு வெற்றி கண்டேன். அதாவது அந்தப் பாடல்களின் தெலுங்கு வரிகளுக்குத் தமிழில் அர்த்தம்

அறிந்து, அந்தப் பாடலின் கதைச் சூழ்நிலைக்கேற்ப, ஒலி நாடாவின் இசைக்கேற்ற தமிழ்ப் படங்களுக்கு எழுதுவதுபோல் நேரிடையாகப் பாடல் எழுதிவிடுவேன். அந்தப் படக் கதை நாயகி - நாயகன் வாயசைவு; தெலுங்குச் சொற்களுக்கேற்ப உதடுகள் அசைவுகள் பற்றி எல்லாம் கவலைப்படாமல் இப்படி மொழிமாற்றுப் பாடல் என்று தெரியாதபடி நல்ல தமிழில் எழுதிவிடுவேன். இதுவும் ஒருவகை மொழிபெயர்ப்புக் கலைதான் என்பது என் கருத்து.

## பாவேந்தரும் - மொழிபெயர்ப்பும்

பாவேந்தர் பாரதிதாசனார் காலத்தில் அவர் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் சிலர் முயன்றதை நான் அறிவேன். அதில் குறிப்பிடத் தக்கவர்கள் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார், சென்னை-சைதை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக அந்நாளில் பதவிவகித்த பெருமாள்முதலியார் அவர்கள். பாவேந்தரின் அன்புக்குரியவரும் அக்கலையில் அந்நாளில் ஆசிரியர் பயிற்சி மாணவராகப் பயின்றவருமான சேலம் கவிஞர் முருகுசுந்தரம் அவர்களை அழைத்து வரும்படி புரட்சிக்கவிஞர் என்னிடம் கூறினார். நானும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று திரு முருகுசுந்தரம் அவர்களைத் தேடியபோது முதல்வரிடம் என்னை அனுப்பி வைத்தனர். திரு பெருமாள் முதலியார் அவர்களும் பாவேந்தர் உதவியாளன் நான் என்பதை அறிந்து, மகிழ்ந்து, பாவேந்தன் சென்னையிலே தங்கியிருக்கும் தகவல்கள் - அவர் முகவரி அனைத்தும் கேட்டறிந்து அனுப்பிவைத்தார்கள் அதன்பின் கவிஞர் முருகுசுந்தரம் வாயிலாகப் பாவேந்தருக்கு அறிவித்துக் கவிஞரை ஒருநாள் சந்தித்துக் கலந்துரையாடிச் சென்றார்,. அதன்பின் பாவேந்தரை அவ்வப்போது அவர் சந்தித்த போதெல்லாம் பாவேந்தரின் கவிதைச் சிறப்புகள் - அவர் மொழிபெயர்த்திருந்த பாவேந்தரின் கவிதை ஆங்கில மொழிபெயர்ப்புகள் - கவிதை மொழிபெயர்ப்பில் ஏற்படும், நுணுக்கமான சிக்கல்கள் அனைத்தையும்பற்றிக் கலந்துரையாடிச் செல்வார்கள். இந்தச் சந்திப்புகளின் போது புரட்சிக்கவிஞர் மிகவும் மகிழ்ந்து போவார்.

## செக் அறிஞர் கமில்சுவலபில்

1960களில் பாவேந்தரின் கவிதைகளை மொழிபெயர்த்து உலக அளவில் பரப்பியவர் செக்கோஸ்லவியா நாட்டுத் தமிழ் அறிஞர் டாக்டர் கமில் சுவலபில் ஆவார். அவர், அவர் நாட்டின் Novy New Oriental Monthly என்ற செக்கோஸ்லவிய மொழிப் பத்திரிகையில் பாவேந்தரின் சில கவிதைகளை மொழிபெயர்த்து அவர் படத்துடன் வெளியிட்டு அந்தப் பத்திரிகைகளையும் பாவேந்தருக்கு அனுப்பி வைத்திருந்தார். அத்துடன் ஒரு மடலும் அனுப்பி வைத்திருந்தார். அதில் இந்த "நூற்றாண்டின் மகாகவியாக நாங்கள் உங்களை மதிக்கின்றோம்; உங்கள் நூல்களை அனுப்பி உதவினால் அது எனக்கும் என் (தமிழ் பயிலும்) மாணவர்களுக்கும் பயன்படும்" என உருக்கமான கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதம் இதோ,

Thiru Bharathi Dasan Avargal,
95, Rue de Perumal Kovil,.
Puducheri-Pondicherry.

**Dear Mahakavi,**

I have enclosed herewith an issue of our Novy New Orient monthly herein you will find a few of my CZECH translations of your splendid poems together with a short note on your life and works.

May I ask to kindly arrange for the despatch of your collected work to me? For me and my students of Tamil its' a

must - your work is undoutedly the peak of Tamil lyrical poetry in the first half of our Century.

Yours Very Sincerely,

(Sd)
Dr.Kamil Zvelebil.

CESKOSLOVENSKA AKDEMIE, VED
ORIENTAL USTAV,
LAZENSKA4, IRAHAI-MALASTRANA.
C tel 663-29-663-96.

## கவிஞர் தீர்த்த குழப்பம்

இந்தக் கடிதத்தில் அறிஞர் கமில் சுவலபில் முகவரி அவரின் தாய்மொழியான செக் மொழியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்து, அவருக்குக் கடிதமும், நூல்களும் முகவரி தெரியாமல் எப்படி அனுப்புவது என்று நாங்கள் குழம்பிப் போய் கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டிருந்தோம். அப்போது எங்கள் குழப்பத்தை அறிந்த பாவேந்தர், "அதுக்கு எதுக்கு கவலைப்படணும், அந்த செக் மொழி முகவரியையே ஓவியம் வரைவதுபோல் அப்படியே வரி பிசகாமல் வரைஞ்சு அனுப்பினால் போச்சு" என்று கவிஞர் கூறிய ஆலோசனை எங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

## கொதித்தெழுந்தார் கவிஞர்

'பாரதியார் ஒரு மகாகவி இல்லை; ஒரு சாதாரண சந்துமுனைச் சிந்து கவிதான்' என்று பல ஆண்டுகளுக்கு முன் அவர் இழிவுபடுத்தப்பட்டபோது, புரட்சிக்கவிஞர் கொதித்தெழுந்தார். தன் கவிதை வழிகாட்டியும் புதுநெறி காட்டிய ஆசானுமான பாரதியாரின் பகைவர் திருந்தும்

வகையில் பேச்சாலும், எழுத்தாலும் புரட்சிக்குரல் கொடுத்து, அவர்களை நடுங்க வைத்தார். அப்போது பாரதியார் பற்றிப் பாவேந்தர் பாடிய பல கவிதைகள் படித்துச் சுவைக்கத்தக்கவை; அவரின் குருபக்தியின் விளக்கமானவை. அதில் ஒரு கவிதையின் ஒரு சிறு முன்பகுதி இதோ;

பாரதியார் உலககவி! அகத்தில் அன்பும்
    பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஓர் ஊருக்கு ஒருநாட்டுக் குரிய தான
    ஒற்றைச்சாண் நினைப்புடையர் அல்லர்; மற்றும்
வீரர்அவர்; மக்களிலே மேல்கீழ் என்று
    விள்ளுவதைக் கிள்ளிவிடவேண்டும் என்போர்!
சீர்உயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
    செம்மைநலம் எல்லாமும் அவர்பால் கண்டோம்

என்று, இப்படிப் பாடி அவர் பெருமைகளைப் பட்டியலிட்டு அடுக்கிக் கொண்டே செல்வார் பாரதியார்.

பாரதியார் பெருமை போற்றி அவர் பாடிய கவிதை வரிகளே அவர் பெருமைக்கும் சான்றாக இன்றும் விளங்குகின்றன.

## மனிதநேயக் கவிஞர்

புரட்சிக்கவிஞர், மனிதநேயத்தின் வடிவமான ஒரு மகாகவியாவார்.

தூயஉள்ளம் அன்புள்ளம்
பெரிய உள்ளம்!
தொல்லுலக மக்களெல்லாம்
ஒன்றேஎன்னும்
தாயுள்ளம் தனிலன்றோ
இன்பம்!

என்பார் அவர். அந்தத் தாயுள்ளத்தின் வடிவாக வாழ்ந்தவர் அவர். அதைக் கண்ணாரக் கண்டுகளித்து, அவரோடு

வாழ்ந்தவன் நான். அவருக்கும், எனக்கும் உள்ள தொடர்பினை அவர் எனக்கு, அவராக விரும்பி குயில் கடிதத் தாளில் அளித்த நற்சான்றின் வழியாக உங்களுக்கு என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதே நல்லது. இதோ அவர் எனக்களித்த அந்த நற்சான்று;

"திரு. பொன்னடி என் கவிதை இதழாகிய 'குயில்' வார ஏட்டின் எழுத்தாளராகவும், என் உதவியாளராகவும் பன்னாள் நன்கு தொண்டாற்றியவர், அவர் மேலும் ஒரு நல்ல கவிஞர்.

இந்த அரும்பணிக்கு ஆதாரமாக அவரிடம் இலக்கிய அறிவும், இலக்கண அறிவும் அமைந்திருக்கின்றன.

நல்ல குணம் செயல் உடையவர் என்பதோடு, கடமை தவறாமை அமையப்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது".

பாரதிதாசன்,
24-11-63.

புரட்சிக்கவிஞர் மகன் திரு மன்னர்மன்னன் அவர்கள் என் இலக்கியப்பணி வெள்ளிவிழா (1985) மலருக்கு எழுதிய கட்டுரையின் ஒரு சிறுபகுதியையும் இங்கே உங்கள் முன் வைப்பது பொருத்தமாக இருக்கும்.

"இருப்தாண்டின் முன்னர் இருந்த காட்சியினை ஒப்பிட்டுப் பார்க்கிறேன். பாரதிதாசன் திரைப்பட நிறுவனத்தின் கணக்கை எழுதவேண்டும். குயில் இதழின் நிருவாகத்தைப் பார்க்கவேண்டும். வருவோர் போவோருக்கு விடை கூறியாக வேண்டும்.

குயில் இதழுக்கு வரும் பாடல்களை முறைப்படுத்த வேண்டும். இத்தனைக்கும் மேலாகவும் முதன்மையாகவும் பாவேந்தர் எழுதிக் குவிக்கும் பாடல்களை எல்லாம் பெயர்த்து எழுதவேண்டும். இன்னும் எத்தனையோ வேண்டும். இத்தனைக்கும் பொறுப்பு ஒரே பொன்னடி. இந்த ஒற்றைப்

பனைமரம் ஒரு படையே பாசறையிறங்க நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறது".

## தொடர்புச் சான்றுகள்

எனவே, பாவேந்தரின் வாழ்க்கைப் பாதையில் நடந்த சில நிகழ்வுகளை மொழிபெயர்ப்பாளர்களுக்குப் பயன்படும் என்ற எண்ணத்தில் உங்கள்முன் வைக்குமுன், எனக்கும் பாவேந்தருக்கும் உள்ள தொடர்பையும் சான்றுகளோடு வைக்கவேண்டியது (ஆய்வுக் கண்ணோட்டத்தில்) என் கடமையாகும். இது ஆய்வாளர்கள் கடமையும்கூட.

## படம் எடுக்க வந்தது ஏன்?

நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மதிப்பிற்குரிய உங்கள் துணைவேந்தர் அவர்களைச் சந்தித்தபோது அவர் கேட்ட முதல் கேள்வி, "புரட்சிக்கவிஞர் திரைப்படம் எடுக்கும் செயலில் ஏன் ஈடுபட்டார்?" என்ற கேள்வியே. இதுசரியான - மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய கேள்வியே! எனவே, அக்கருத்துபற்றிச் சுருக்கமாகவேனும் இங்கே விளக்குவது என் கடமையாகும்.

புரட்சிக்கவிஞரின் திரைப்படத்துறைத் தொடர்புகளை உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவர் அந்நாளிலேயே பல படங்களுக்குக் கதை-வசனம்-பாடல் எழுதியவர். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் - தயாரிப்பாளர்-இயக்குநர் திரு டி.ஆர்.சுந்தரம் அவர்களின் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவராகி, அந்நிறுவனத்தின் படங்களுக்குக் கதைவசனம் பாடல் எழுத ஒப்பந்தம் செய்யப்பட்டு, அவர் பணியாற்றிய கதையும் நீங்கள் அறிவீர்கள். எனவே, மக்களைப் பெரிதும் கவர்ந்த ஆற்றல் வாய்ந்த திரைப்பட உலகத்தின் வழியாக மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்று புரட்சிக்கவிஞர் நம்பினார். அதனால், தன் ஒப்பற்ற காவியமான "பாண்டியன் பரிசு" கதையைத் திரைப்படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அன்று புகழ்பெற்ற இயக்குநராக விளங்கிய திரு பீம்சிங் இயக்கத்தில் நடிகர்திலகம் சிவாஜி, நடிகவேள்

எம்.ஆர்.ராதா, கன்னடக்கிளி என்று அழைக்கப்பட்ட நடிகை சரோஜாதேவி போன்றோர் அப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாயினர். "பாரதிதாசன் பிக்சர்ஸ்" படநிறுவனம் வாயிலாக எடுக்கப்படவிருந்த அப்படத்தின் தொடக்கவிழா, அந்நாளைய தமிழக முதல்வர், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அம்முயற்சியில் பாவேந்தர் வெற்றி பெறவில்லைதான். பொருள் இழப்பும் அவருக்கு ஏற்பட்டது என்பதும் உண்மையே!

## மொழிபெயர்ப்பில் அவர் ஆசை

"ஆற்றல் வாய்ந்த இத்துறையின் தொழிலில் ஈடுபட்டு மக்களுக்குப் பயன்படும் நல்ல கதை - கருத்துகள் இணைந்த படங்கள் எடுத்து, அதன் வழியாக அவர்களைப் பண்படுத்த வேண்டும்; இந்தத் துறையில் கிடைக்கும் வருவாய் மூலம் சென்னையில் மையமான ஓரிடத்தில் நூலகம் - அச்சகம் நிறுவி, தமிழ் மக்களின் பெருமை சாற்றும் சங்க இலக்கியங்கள் போன்ற இலக்கியங்களை, தகுதிமிக்க அறிஞர்கள் மூலமாக உலக மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். அதேபோல், உலகின் உயர்ந்த, அறிவார்ந்த, மக்கள் நலம் சார்ந்த பலமொழி இலக்கியங்களையும் தமிழில் வெளியிட்டு, தமிழர் விழிப்புக்குப் பாடுபடவேண்டும்" என்பதே அவரின் விருப்பமாக இருந்தது. இதனால், என்ன புலப்படுகிறது? மொழிபெயர்ப்புக் கலை மூலம் மக்கள் நலன் நாடும்-பயன்படும் தமிழ் இலக்கியங்களையும், உலகின் பிறமொழி இலக்கியங்களையும் மொழிபெயர்த்து அளிப்பதன்மூலம் உலக மக்களும் தமிழ் மக்களும் பயன்பெறுவார்கள், பண்படுவார்கள் என்ற பாவேந்தரின் தணியாத வேட்கை புரிகிறதல்லலவா? இதுபற்றி விரிவாக நான் 'நினைவலைகளில் பாவேந்தர்' என்ற என் நூலிலும், 'ராணி' வாரஇதழ் பேட்டியிலும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். (பாவேந்தர் மறைந்தவுடன் வெளிவந்த இதழ்). இதேபோல் பாவேந்தர் சென்னை வாழ்க்கை தொடர்பான சில செய்திகளையும், குறிப்புகளையும் ஆய்வுக்குப் பயன்படும் என்ற நோக்கில் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

## சோர்ந்தாரில்லை

படமுயற்சி தோல்வி கண்டதால், அவர் சோர்ந்துவிடவில்லை. அவர் நூல்களை வெளியிட விரும்பிய அன்பு நூலக உரிமையாளர் திரு இ. ராமரத்தினம் அவர்கள் விருப்பப்படித் திருக்குறள் உரை போன்ற வெளிவராத அவரின் நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார். அந்த நிறுவனத்தில்தான் நான் பாவேந்தர் சார்பாளனாகப் பணியில் அமர்த்தப்பட்டேன். சிந்தனையாளர் ஒன்றுபடுவோம்-சிந்தனையாளர் செயல்படுவோம் - என்ற முழக்கத்தோடு சாதி-சமய-அரசியல் சார்புகளுக்கு அப்பாற்பட்ட உணர்வோடு தமிழ்க் கவிஞர் மன்றத்தைத் தோற்றவித்து இளந்தலைமுறையை வளர்க்கப்பாடுபட்டார். அதற்காகச் சென்னையிலிருந்து குயில் ஏட்டை மீண்டும் கொண்டு வந்து பல கவிஞர்களை - எழுத்தாளர்களை வளர்த்தார். அந்த ஏட்டின் உதவி ஆசிரியனாகவும் நான் பணியாற்றினேன்.

மேலும் தன் கவிதை வழிகாட்டி- புதுநெறி காட்டிய புதுமைப்புலவன் பாரதியின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கவேண்டும் என்ற அவரின் பலநாள் ஆசையை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டு, அயராது உழைத்தார்.

## கெஞ்சினாரில்லை

இந்த முயற்சியிலும் அவருக்கு முழுமையான வெற்றி கிடைக்கவில்லை என்பது உண்மையே. பண நெருக்கடி ஏற்பட்டது என்பதும் சரியே. ஆனால், அவர் எவரிடமும் அதற்காக அண்டிக் கெஞ்சும் வாழ்க்கை வாழவில்லை. புதுவையில் உள்ள அவரின் ஒரு வீட்டை விற்றுப் பண நெருக்கடியைச் சமாளித்தார். உண்மை இப்படி இருக்க, அவரின் சென்னை வாழ்க்கையைக் கொச்சைப்படுத்தும் வகையில் பல கற்பனைக் கதைகளை உலவ விட்டு அவரின் புகழ் வாழ்க்கைக்குச் சிலர் இழுக்குத் தேடி வருகின்றனர். அதில் குறிப்பாக ஒருவர் பாவேந்தரின் சென்னை வாழ்க்கையை அலசி ஆராய்வது போல், மூன்று நூல்களை

எழுதிப் புரட்சிக் கவிஞருக்குத் தீராத களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். பாவேந்தர் மறைந்தது 1964 ஏப்ரல், 21. வேலூரிலிருந்து இந்தப் புரட்டாளர் சென்னை வந்தது 1968. பாவேந்தர் புகழ் வளர்க்கும் நோக்கில் பாவேந்தர் அணியை வலுவானதாக உருவாக்கும் நோக்கில் பாவேந்தரை ஒருமுறை பார்த்தேன் என்பவரையும், 'பாவேந்தர் அன்பில் கலந்தவர் இவர்' என்று கூறிப் பெருமைப்படுத்துவேன். 'என் முல்லைச்சரம்' பத்திரிகை-புரட்சிக்கவிஞர் தொடங்கிய தமிழ்க் கவிஞர் மன்றம் போன்ற அமைப்புகளின் நிகழ்ச்சிகள் மூலமாகவும் இப்படிப்பட்டோருக்கு வாய்ப்பளித்து, விளம்பரம் தேடிக் கொடுத்தேன். கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும், பாவேந்தர் தொடர்பான வாழ்க்கை நிகழ்வுகளைப் பேசுவேன்-எழுதுவேன். அந்த உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில், பாவேந்தர் தொடர்பாகப் பாவேந்தர் குடும்பத்தினர் கூறும் செய்திகள்-கட்டுரைகள் - மற்றும் பலர் பாரதிதாசனாரைப்பற்றி எழுதிய, கூறிய கருத்துக்களின் அடிப்படையில் நிறைய கற்பனைக்கெட்டாத புனைகதைகளை, அந்நூல்களில் பின்னியுள்ளார் இவர். அந்நூல்களை வெளியிடும் முன் என் பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெற்றே நூல்கள் அச்சானதாகவும் குறிப்பிட்டுள்ளார். பலர் அவர்களுக்கே தெரியாமல் அந்நூல்களில் பொய்சாட்சிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

### கூறப்பட்டவை என்ன?

மேலைநாட்டுப் பாணியில் பரபரப்பான விற்பனை நோக்கம் ஒன்றையே மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள அந்நூல்களில் கூறப்பட்டுள்ளவை என்ன?

> புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படம் எடுக்க வந்து - தோற்றுப்போய், பிறரை நத்தி வாழும் கேவலமான வாழ்க்கை வாழ்ந்தார்.

> பணத் தட்டுப்பாடு காரணமாக என்னிடம்கூட (அந்நூலாசிரியரிடம்) பணம் கேட்டார். ஒரு நண்பரிடம் கடன் வாங்கி நான் கொடுத்தேன்.

ஒரு நீதிபதி (இவருக்குப் பலவகையில் உதவிக் காப்பாற்றியவர்) மாதாமாதம் பாரதிதாசனுக்கு ரூ.100/- யாருக்கும் தெரியாமல் கொடுத்து உதவி வந்தார். (பாவேந்தர் வீடு இந்த நீதிபதி வீட்டுக்கு அருகில் இருந்தும், பாவேந்தரை அவர் வாழ்ந்தபோது ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை, அவர் மறைந்தபோதும் வந்து அஞ்சலி செலுத்தாதவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது)

பாரதிதாசன் குணக்கேடராக இருந்தார். பல வளரும்-வளர்ந்த கவிஞர் எழுத்தாளர்களை அவமானப்படுத்தினார். கேலியும் கிண்டலும் செய்தார்.

கண்டவர்களைக் கண்டபடி எல்லாம் விமர்சனம் செய்து அவமானப் படுத்தினார். பல மதங்கள், தலைவர்கள், பெருமக்களை இழிவுபடுத்திப் பேசினார்.

பாலியல் தொடர்பான உறவுகளை வைத்துக் கொண்டு ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்தார். குறிப்பாக இரண்டு மதிப்பிற்குரிய பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தார், என்பன போன்ற அணுவளவும் உண்மையில்லாத - அபத்தங்களை - ஆபாசங்களை அந்நூல்களில் சாமார்த்தியமாகப் புகுத்தி, உண்மையோ என்று படிப்போர் எண்ணத் தோன்றும் வகையில் உலவவிட்டுள்ளனர்.

இவர் தன் மோசடிச் செயலுக்குச் சாமர்த்தியமாகப் புரட்சிக்கவிஞரின் கவிதை வரிகளை - கவிதைத் தலைப்புகளையே மையமாக வைத்துப் புளுகின் வடிவான புனைகதை புனைந்துள்ளார் என்பது மொழிபெயர்ப்பாளர்கள் - ஆய்வாளர்கள் கருத்திற் கொள்ளவேண்டிய ஒன்றாகும்!

**காரணம் என்ன?**

இந்தப் பித்தலாட்ட முயற்சி பற்றி இங்கே குறிப்பிடக் காரணம் என்ன? ஒரு கவிஞனின் - ஒரு படைப்பாளனின் படைப்பைப் பிறமொழிகளில் மொழி பெயர்க்கும் பணி செய்வோர் அந்தந்தப் படைப்பாளனின் உண்மை வாழ்க்கைப்

பின்புலத்தையும் அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அந்தப் படைப்பாளனின் கற்பனை ஊற்றில் விளைந்த ஒவ்வொரு சொல்லுக்கும், வரிக்கும் சரியான பொருள் உணர்ந்து மொழி பெயர்க்கமுடியும். அந்த மொழிபெயர்ப்பே உயிரோட்டமுடைய உண்மை மொழிபெயர்ப்பாக இருக்கமுடியும் என்பது என் கருத்து. -

மொழிபெயர்ப்புக் கலையில் மிக முக்கியமாக நாம் கவனத்தில்கொள்ள வேண்டிய ஒன்று. ஒரு கவிஞரின் படைப்பாளரின் அல்லது சாதனையாளரின் படைப்புகளை - முக்கியமாக வாழ்க்கை வரலாற்று நூல்களை மொழிபெயர்க்கும்போது நம் மொழிபெயர்ப்புக்கு உள்ளான நூல் உண்மையான தகவல்களை உள்ளடக்கியதா? அதற்குரிய ஆதாரங்கள் அதில் அடங்கியுள்ளனவா? அந்த நூலாசிரியர்க்கும் - படைப்பாளர்க்கும் உள்ள நட்பு- தொடர்பு கடிதங்கள் - புகைப்படங்கள் வாயிலாகச் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளனவா என்பதை எல்லாம் ஆய்வாளர்கள் - மொழி - பெயர்ப்பாளர்கள் கணக்கில் கொள்ள வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

## ஆதாரங்கள் உண்டா?

பாவேந்தரைப் பற்றி அவதூறான ஆபாசமான புனைகதைகளை உள்ளடக்கி நூல்களை எழுதியவர் சாமர்த்தியமாக (சில ஆசாபாசங்களின் அடிப்படையில்) ஆட்களைத் திரட்டத் தெரிந்திருந்தார். ஆனால், பாவேந்தருக்கும் இவருக்கும் இருந்ததாகக் கூறப்படும் உறவுகளை மெய்ப்பிக்கும் எந்த ஆதாரங்களும் அந்த நூல்களில் கொடுக்கப்படவே இல்லை. புரட்சிக்கவிஞரைப் பற்றி வண்டி வண்டியாக - கதை கதையாக எழுதும் இவர், பல்லாண்டுகளாக அவரோடு நகமும், சதையுமாக வாழ்ந்தேன் என்று அந்நூல்களில் கதையளக்கும் இந்நபர், அந்நூல்களில் பாவேந்தருடன் இவர் இருக்கும் புகைப்படங்களையோ அவர் இவருக்கு எழுதிய நட்பை நிரூபிக்கும் கடிதங்களையோ - நிகழ்ச்சிகள் எந்த நாள், எந்த ஆண்டில் நடைபெற்றன என்பன போன்ற

ஆதாரங்களையோ கொடுக்கப்படவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது!

**மற்றொன்று:** கவனத்தில் கொள்ளவேண்டிய மற்றொன்று. பாவேந்தர் பெயரில் இவரால் தாக்குதலுக்குள்ளாக்கப்படும் எவரின் பெயரையும் அந்நூலில் குறிப்பிடமாட்டார் - பாவேந்தருடன் தொடர்புபடுத்திக் கதைபின்னப்படும் மகளிரின் பெயரைக் குறிப்பிடமாட்டார். ஆனால், எப்படியோ தவறுதலாக நான்காவதாக எழுதப்பட்ட நூலில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புகழ்பெற்ற வயதான முன்னாள் நகைச்சுவை நடிகையைப் பிணைத்து, படிப்போர் நம்பும்படிப் பெயர் குறிப்பிட்டு அந்நூலில் எழுதியதால்தான், சட்டபூர்வமான எங்கள் நடவடிக்கையின் மூலம், அவர் தில்லுமுல்லுகளின் முகத்திரையைக் கிழித்து வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுக்க முடிந்தது.

## மோசடி அம்பலமானது

தப்பிக்க வழியறியாமல் சரியாகக் கூண்டில் மாட்டிக் கொண்ட அவர், நான் எழுதியதெல்லாம் பொய்தான்- பேட்டி கண்டேன். அவரவர்களுடன் கறி மீன் வறுவல் எல்லாம் உண்டேன், என்பதெல்லாம் பொய்யே. இன்னொருவன் சொன்னதை நம்பி எழுதிவிட்டேன் என்று இருமன்னிப்புக் கடிதங்களை எழுதியதால் அவர் மோசடி நாட்டிற்குக் குறிப்பாகத் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வெளிச்சத்துக்கு வந்தது. அவரை விடாப்பிடியாக ஆதரித்து - நியாயம் கற்பித்து வந்த வஞ்சகர் சிலரும் தங்கள் பசப்புகள் இனி செல்லாது என உணர்ந்து ஒடுங்கினர். இந்தப் பணியில் 34 ஆண்டு களாக வெளிவந்து கொண்டிருக்கும் என் 'முல்லைச்சரம்' தொடர்ந்து உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து, வெற்றி கண்டது. இப்படிப் புகழ்பெற்ற வரலாற்றுப் பெருமக்கள் வாழ்வில் பல மோசடிகள் நுழைக்கப்படலாம். மொழிபெயர்ப்பாளர்கள் ஆய்வாளர்கள் விழிப்பாக இருந்து உண்மை எது? போலி எது? என்று உணர்ந்து, நம்மவர் நமக்கு வேண்டியவர் என்ற பாசபந்தத்திற்கும் உட்படாமல்

செயல்பட்டால், தவறானவர்களின் செயல்கள் தடுக்கப்படும்; தகர்க்கப்படும்.

## இருபது வயது இளைஞன்

புரட்சிக்கவிஞர் தான் மறையும்வரை ஓர் இருபது வயது இளைஞனைப் போல் செயல்பட்டுக் கொண்டிருந்தார் என்பது நாங்கள் அறிந்த உண்மை. 73 வயதைக் கடந்தவராக அவர் என்றும் என்போன்றோரின் கண்களுக்குத் தென்படவே இல்லை. அவர் எழுதியதைப் போலவே - வாழ்ந்தார். உள்ளொன்றும் புறமொன்றும் என்ற வாழ்க்கை அவர் வாழ்வில் இல்லை. தகுதி உடையவர்கள் வயதில் சிறியவர்களாக இருந்தாலும், அவர்களை மதிக்கும் விதத்தில் மதிக்கப் புரட்சிக்கவிஞர் தவறியதே இல்லை. அதற்கு நானே சான்றாக உள்ளேன்.

அவருக்கும் எனக்கும் ஏறக்குறைய ஐம்பது வயது வேறுபாடு. அவரின் உதவியாளரான என்னைப் பெயர் சொல்லி அழைக்கும்போதுகூட பொன்னடியான் என்று அழைக்கவேமாட்டார். பிறர் அப்படி அழைக்கவும் அனுமதிக்கமாட்டார். 'பொன்னடி' என்றுதான் என்னை அழைப்பார். என்னைப் பெயர் சொல்லி அழைக்கும்போதும், எனக்குக் கடிதங்கள் எழுதும்போதும் திரு பொன்னடி என்றே அழைப்பார். அதற்கு ஆதாரமான பல கடிதங்களை உங்கள் பார்வைக்கு இங்கே கொண்டு வந்திருக்கிறேன். இதோ பாருங்கள் (கடிதங்களைக் கூட்டத்தினர்க்குக் காட்டுகிறார்).

அதில் ஒரு கடிதம் இங்கே சான்றாக இணைக்கப்படுகிறது.

பாரதிதாசன் பிக்சர்ஸ்

10, ராமன் தெரு, தியாகராயநகர், சென்னை-17.

திரு பொன்னடி,<br>
கங்கை,<br>
ஆர்க்காடு ரோடு,<br>
கோடம்பாக்கம், சென்னை 28-11-62

நம் அரங்கரத்தினம் வருகின்றார். அவரிடம் சேதிஅறிந்து ஆவன உடனே செய்க!

(ஒப்பம்) பாரதிதாசன்

(பாவேந்தரின் நூல்களை வெளியிட உரிமை பெற்றிருந்த அன்பு நூலகத்தில் பாவேந்தர் சார்பாளனாக; நான் பணியாற்றினேன். அந்த நிறுவனத்திலிருந்து கங்கை என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. எனவே, கடிதத்தில் கங்கை என்று பாவேந்தர் குறிப்பிடுகிறார்.

அதேபோல், பாவேந்தர் 15-05-62 நாளிட்ட குயில் இதழின் தலையங்கத்தில் இப்படி எழுதுகிறார்.

## பெருந்தன்மை

சென்ற குயிலில் (1.5.62) பிழைகள் ஏராளம். அதற்குக் காரணம் இன்னும் அலுவலரை வேண்டிய அளவு அமைக்காததே. இப்பொழுது அலுவல் பார்த்து வருகின்றவர்கள் எத்தனை பேர் என்பதையும் இப்போது சொல்லி விட எண்ணுகிறோம். 10 பேர் இருப்பார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். அல்லது ஐந்து பேர்கள் இருக்கலாமோ என்று நீங்கள் எண்ணிவிடக்கூடும்.

நான் ஒருவன், பொன்னடி ஒருவர். சென்ற இதழில் பிழைபார்க்க ஆள் இல்லாததால் இருப்பவர்க்கும் ஓய்வில்லாததால் இலக்கணப் பிழை மிகுதியாயிற்று. அதற்காக வருந்துகிறோம்.

இப்படித் தொடர்கிறது அந்தத் தலையங்கம். இதில் அவரின் உயர்ந்த உள்ளம் - தமிழுள்ளம் - பண்புள்ளம் பளிச்சிடுகிறதல்லவா? பெருந்தன்மை முகங்காட்டுகிறது, அல்லவா?

## பாட்டாளர் கவிஞர்

புரட்சிக்கவிஞர் வாழ்நாள் எல்லாம் ஏழைகளுக்காக -

பாட்டாளர்களுக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பாடிக்கிடந்தார்.

துன்பம் பிறர்க்குநல் இன்பம் தமக்கெனும்
துட்ட மனோபாவம்
அன்பினை மாய்க்கும் அறங்குலைக்கும்நல்
ஆக்கந்தனைக் கெடுக்கும்
வன்புக்கெல்லாம் அதுவே துணையாய்விடும்
வறுமையெலாம் சேர்க்கும்
இன்பம் எல்லார்க்கும் என்றே சொல்லிப்பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்!

என்று முழக்கமிட்டார், பாவேந்தர். அந்த முழக்கத்திற்கு ஏற்ப எல்லா நிலைகளிலும் உழைத்துக் கிடந்தார், அவர்.

பாவேந்தர் வீட்டு வேலைக்காரியாகப் பணியாற்றியவர் பட்டம்மா. நடுத்தர வயதுடையவர். பாவேந்தர் இல்லச் சிறப்பறிந்து பணியாற்றிய அந்தப் படிப்பறிவில்லாத அப்பாவிப் பெண் தேனாம்பேட்டை கூவம் கரையில் இருந்த ஆலையம்மன் கோயில் பகுதியில் உள்ள குப்பத்திலிருந்து வேலைக்கு வந்துகொண்டிருந்தார். பட்டம்மாவுக்கு நான்கு பிள்ளைகள் - குடிகாரக் கணவன் என்ற சுமையோடு வறுமை வயப்பட்ட வாழ்க்கை பாவேந்தரின் மனத்தைத்தொட்ட வாழ்க்கையாகும்.

ஒருநாள் உடல்நிலை சரியில்லா நிலையிலும் வேலைக்கு வந்த பட்டம்மா வேலை முடிந்து போகும்போது மழை பிடித்துக் கொள்கிறது. வீட்டுக்கு மழையில் நனைந்துகொண்டே போக முனைந்த பட்டம்மாவைப் பார்த்துவிட்ட கவிஞர் பட்டம்மா மழையில் நனைந்து கொண்டு போகாதே - மழைவிட்டபின்பு போ - இல்லேன்னா வீட்டில் குடை வாங்கிக் கொண்டு போ - என்று கனிவோடு கட்டளை இடுகின்றார். இந்தக் கனிவுக் காட்சியில் அவரின் கவிதைமணம் வெளிப்படுகிறதல்லவா?

## என் கவிதை

வேதரத்தினம் என்பவர் ரசிக ரஞ்சினி என்ற பத்திரிகையை அந்நாளில் நடத்தி வந்தார். அவர் புரட்சிக்கவிஞரின் அன்பிற்கு உரியவர். புரட்சிக்கவிஞருக்கு அவர் விரும்பும் சர்ச்சில் சுருட்டுப் பெட்டி போன்ற அன்பளிப்புகளை அளித்து மகிழ்விப்பார். கவிஞரின் கவிதைகளை வாங்கி அவர் பத்திரிகையில் வெளியிடுவார். அப்படி ஒருநாள் கவிதை வாங்க வந்தவர், நான் பெயர்த்தெழுதும் கவிதை ஒன்றைப் பார்த்து, பாவேந்தர் கவிதை என்று நினைத்து, இது நான்றாக இருக்கிறது, வரும் இதழுக்கு இந்தக் கவிதையைக் கொடுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறார். இது அய்யா கவிதை இல்லீங்க - என் கவிதை என்று நான் கூறியதைக் கேட்டு வியந்து போய், ரொம்ப நன்றாக இருக்கிறது. உங்கள் இந்தக் கவிதையையும் கொடுங்கள் - வெளியிடுகிறேன் - பொன்னடி என்று சொன்னபோது, நான், அய்யா கவிதை இடம்பெறும் அதே இதழில் என் கவிதையும் இடம்பெறுவது நன்றாக இருக்காது என்று மறுக்க, இல்லை.... இல்லை இம்மாதிரி தன் மாணவர்கள் எழுதும் தரமான படைப்பு களைப் படித்து அய்யா மிகவும் சந்தோசப்படுவர், என்று விடாப்பிடியாக அவர் என் கவிதையை வாங்கிச் சென்று விட்டார். இந்த நிகழ்ச்சியை நான் மறந்தே போய்விட்டேன்.

## அவர் மனத்தின் பாதிப்பு

சில வாரங்களுக்குப்பின் ஒருநாள் அன்று வந்திருந்த அஞ்சல்களைப் பத்திரிகைகளைப் பாவேந்தர் அறையில் வைத்துவிட்டு வந்து என் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பொன்னடி என்ற பாவேந்தரின் அழைப்பு. விரைந்து சென்று அவர்முன் நிற்கும் என்னிடம் உன் வீட்டிற்குப்பணம் அனுப்பிவைத்து எத்தனை மாதங்கள் ஆகின்றன என்று கேட்கிறார். பாண்டியன் பரிசு படநிறுவனத்தில் பாவேந்தர் உதவியாளனாக என்னைச் சேர்த்து மாதாமாதம் ஊதியம் வழங்கி வந்தனர். நான் விரும்பாதபோதும், பட நிறுவனம் கொடுக்கிறது, பேசாமல் வாங்கிக் கொள் என்று பாவேந்தர் கூறிவிட்டார். பட

நிறுவன வேலைகள் தடைபட்டு - வங்கிக் கணக்கும் முடக்கப்பட்டபோது ஊதியத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இப்பொழுது பாவேந்தர் திடீரெனச் கேட்டதன் மர்மம் எனக்கு விளங்காமல், திகைத்து, இப்போது நம் நிறுவன நிலையும் சரியில்லை. மேலும் என் தந்தையும் ஆசிரியராக இருப்பதால் ஒன்றும் அனுப்பத் தேவையில்லை". என்று என் கருத்தைத் தெரியப்படுத்துகிறேன். உடனே பாவேந்தர் அது சரியில்லை, ஒரு ஆசிரியராக இருந்து குடும்பம் நடத்துவது எவ்வளவு சிரமம் என்பதை நானறிவேன் (அவரும் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றவர் அல்லவா?) என்று சொல்லிக்கொண்டே அவர் பெட்டி இருக்கும் மூலைக்கு நகர்கின்றார். எதுவும் புரியாமல் அவர் சிறிய மேசைமீது அன்றைய அஞ்சல்களோடு கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த ரசிக ரஞ்சினி பத்திரிகையைத் திருப்பிப் பார்த்தேன். அந்தப் பக்கத்தில் எரியட்டும் இவ்வுலகே என்ற என் கவிதை அச்சாகியிருந்தது. (முன்பு திரு வேதரத்தினம் என்னிடம் வாங்கிச் சென்ற கவிதை) அப்படியென்றால் பாவேந்தர் அந்தக் கவிதையைப் படித்திருக்கிறார். என் இன்னல்கள் - துன்பங்கள் அடிப்படையில் எழுந்தது அந்தக் கவிதை என்று புரட்சிக்கவிஞர் நினைத்து, அந்தத் துன்பங்களைக் களையத்தான் இப்போது முயன்றிருக்கிறார் என்பதை நினைத்தவுடன் குற்ற உணர்வு என்னைக் கவ்விக் கொண்டது - அதனால் வியர்வைக்குளியலில் நான்!

பணம் எடுத்துக்கொண்டு வந்த பாவேந்தர், உணர்விழந்து, ஊமையாக, வியர்வைக்குளியலோடு திகைத்துநின்ற என்னிடம் இந்தா, தியாகராயநகர் அஞ்சல் நிலையத்திற்குச் சென்று உன் வீட்டிற்கு உடனே இந்தப் பணத்தை அனுப்பி வா என்று ஆணையிடுகிறார்.

என் அன்பிற்கும் நட்பிற்கும் உரிய மற்ற கவிஞர்கள் - எழுத்தாளர்கள் படும் துன்பங்களை நினைத்து நான் எழுதிய கவிதை அது. என் கவலையால் எழுந்த கவிதை அது என்று தவறாக நினைத்து, என் கண்ணீர் துடைக்கப் பாவேந்தர் முயன்றதை இன்று நினைத்தாலும் என்னை இழந்து அந்த இனிய நினைவுகளில் மூழ்கிவிடுகிறேன்.

முதலில், அந்தப் பத்திரிகையில் வெளிவந்த என் கவிதையையும் ஒரு பொருட்டாக மதித்துப் படித்திருக்கிறார் பாவேந்தர். பிறகு அவரே ஒரு மகாகவியாக இருப்பதால், இந்தப் பிஞ்சுக் கவிஞனின் இந்தக் கவிதை எதன் அடிப்படையில் எழுந்தது என்று ஆய்ந்திருக்கிறார். அதன்பின், அந்த இளங்குயிலின் துயர்தீர்க்க முனைந்திருக்கிறார். கவிஞன் என்பவன்யார் என்பதற்கு அந்தக் கவிஞனின் நல்ல மனம் எப்படிப்பட்டது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா?

## அந்தக் கவிதை

இப்படி என் வாழ்க்கையில் பாவேந்தர் தொடர்புடைய அரிய, மறக்கமுடியாத நிகழ்வுகள் பல உண்டு. பாவேந்தர் மனத்தைப் பாதித்த ரசிக ரஞ்சினி இதழில் வெளிவந்த அந்தக் கவிதை இதோ!

### எரியட்டும் இவ்வுலகே!

எழுத்தாளன் வாழ்வினில்
என்றும் துயர்என்றால்
எரியட்டும் இவ்வுலகே - பற்றி
எரியட்டும் இவ்வுலகே!

உலகம் உயர்ந்திட உறங்கா துழைத்தவன்
உயிர்வாதை நிதம்படுவான்! - மக்கள்
நிலம்வாழ நிலைமீள நெறிகெட்ட போக்குகள்
நீக்கிடத் துயர்படுவான்! - அந்த எழுத்தாளன் ....

புரியாத உலகில்நாம் போகும் வழியுரைத்துப்
புத்திமதி அளிப்பான் - ஏதும்
தெரியாது திண்டாடித் தெருவில் நிற்கும் நமக்குத்
தெருவிளக்காய் இருப்பான்!
- அந்த எழுத்தாளன் .....

நினைவிலும் கனவிலும் நாட்டின்நல் வாழ்வினை
நினைந்துநினைந்து மகிழ்வான் -தன்
மனைவிமக்கள் உறவார் மடியும் நிலைவரினும்
மற்றவர்க்காய் உழைப்பான்!
- அந்த எழுத்தாளன் .....

சாவாத இலக்கியம் சமைத்து வருங்காலச்
சரித்திரம் எழுதிவைப்பான்! வெல்லப்
பாகான - கருத்துகள் பருக நமக்களித்துப்
பாதியில் உயிர்விடுவோன்!
- அந்த எழுத்தாளன் .....

## மேலான நிகழ்ச்சி

இதைவிடவும் மேலான ஒரு நிகழ்ச்சி, இன்றும் என் நெஞ்சில் இனித்துக் கிடக்கும் நிகழ்ச்சி ஒன்று உண்டு.

புரட்சிக்கவிஞரின் நூல்களை - குறிப்பாக வெளிவராத அவரின் திருக்குறள் உரைபோன்ற நூல்களைத் தன்அன்பு நூலகத்தின் மூலம் வெளியிட 15 ஆண்டுகளுக்கு உரிமை பெற்றிருந்தார் பாவேந்தர் பேரன்பர் திரு இராமரத்தினம். அதற்கான ஒப்பந்தங்களில் பாவேந்தரின் கையொப்பம் பெற்று, பாவேந்தருக்கு ஒரு முன்பணமும் கொடுத்து விடைபெறுகின்றனர் - திரு இராமரத்தினம் அவர்களும் - வழித்துணை இராமன் அவர்களும். அந்த நேரத்தில் நாங்கள் யாரும் எதிர்பாராவண்ணம் புரட்சிக்கவிஞர் அவர் அருகில் உதவிக் கொண்டிருந்த என்னைச் சுட்டிக்காட்டி, இராமரத்தினம், உங்கள் அன்பு நூலகத்திலே இந்தப் பொன்னடியை என் சார்பாளனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று குழைவாக வேண்டுகோளை வைக்கிறார். திடீரெனப் பாவேந்தர் வைத்த இந்த வேண்டுகோளின் உட்பொருள் விளங்காமல் நானும் திகைப்பில், அதிர்ச்சியில் நிற்கிறேன்.

பாவேந்தர் வேண்டுகோளைக் கேட்ட இருவரும் மகிழ்ந்துபோய், அய்யா பொன்னடியை எங்கள் நிறுவனத்தில் சேர்த்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி. நல்ல பணியில் -

நல்ல ஊதியத்தை நிர்ணயித்து விரைவில் அவரைச் சேர்த்துக் கொள்வோம் என்று உறுதியளித்து விடைபெறுகின்றனர்.

## என் பதட்டம்

பதட்டமடைந்த நான், அய்யா என்னை எதற்கு அன்பு நூலகத்தில் சேர்க்கிறீர்கள். உங்களுக்குப் பணியாற்றுவதே எனக்குப் போதும் என்று முடிக்குமுன் நீ, பேசாமல் இரு, உனக்கு ஒன்றும் தெரியாது. அந்த நிறுவனம் நாளை பெரிய அளவில் வளரப் போற நிறுவனம். உனக்கென்று ஒரு வாழ்க்கை இருக்கிறது, ஒரு எதிர்காலம் இருக்கிறது. நீ எங்கே போறே. நல்ல ஊதியத்தோடு என் சார்பாளனாகத் தானே அதில் பணியாற்றப் போற. அவர்களே ஒத்துக்கிட்ட பிறகு நாம மறுக்கக் கூடாது என்று என் வளமான எதிர்கால வாழ்க்கையைச் சிந்தித்துச் செயல்பட்ட அந்தப் பெருங்கவிஞனின் பேருள்ளம் எத்தகைய கருணை வடிவானது என்பதை நான் உங்களுக்கு விளக்கத் தேவை இல்லை.

## ஹெர்குலிஸ் திரைப்படம்

சென்னை அண்ணாசாலையில் உள்ள 14 தளம் எல்.ஐ.சி. கட்டடம் அருகில் 'குளோப் தியேட்டர்' என்ற திரையரங்கம் ஒன்று இருந்தது. இதில் ஹெர்க்குலிஸ் என்ற ஆங்கிலத் திரைப்படம் திரையிட்டிருக்கும் விளம்பரத்தை அன்றைய காலைப் பத்திரிகையில் படிக்கிறார், புரட்சிக்கவிஞர். இந்தப் படம் ஒரு நல்ல கதைப் பாங்குடைய படம். மாலைக்காட்சிக்குப் போக வேண்டும், நினைவுபடுத்து என்று என்னிடம் தெரிவித்தார்.

புரட்சிக்கவிஞரின் சிந்தனைத் திறனுக்கேற்ற நல்ல படங்களாக ஆங்கிலப்படங்கள் இருப்பதால், சென்னை தியாகராயநகர் இராஜகுமாரி திரையரங்கம் போன்ற திரையரங்குகளில் திரையிடப்படும் படங்களை அவ்வப்போது கவிஞர் விரும்பிப் பார்ப்பது வழக்கம்.

அன்று மாலை எங்கள் பட நிறுவனக் காரில் (எலி

கண்ட் பியட் கறுப்புநிறம்) திரையரங்கம் சென்றோம். பெருங்கூட்டம் 'ஹவுஸ்புல்' பலகை மாட்டப்பட்டு இருந்தது. காரோட்டியைக் கவிஞருடன் இருக்கச் சொல்லிவிட்டு டிக்கெட் வாங்கச் சென்றால், டிக்கெட் கிடைப்பதாக இல்லை. நேராக நிர்வாகியிடம் சென்று, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வந்திருக்கிறார் - மூன்று சீட்டுகள் கொடுத்துதவ வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். செட்டிநாட்டுத் தமிழரான அவர் பாரதிதாசன் வந்திருக்கிறார் என்ற செய்தி கேட்டு அப்படியா - அய்யா வந்திருக்காங்களா? என்னால் முடிந்த முயற்சியைச் செய்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றவர் சிறிது நேரத்தில் இரண்டு சீட்டுகளுடன் வந்து என்னால் இரண்டுதான் ஏற்பாடு செய்ய முடிந்தது என்று கொடுத்துத் தன் இயலாமையை வருத்தத்துடன் தெரிவித்தார்.

## காரோட்டி மீதும் கருணை

புரட்சிக்கவிஞரிடம் வந்து எனக்கும், அவருக்குமாக இரண்டு சீட்டுகள்தான் கிடைத்தன என்று கூறினேன். மகிழ்ச்சி இல்லா முகத்துடன் காரோட்டிக்கும் வேண்டுமே, எங்கே அந்த நிர்வாகியைக் காட்டு என்று கூறி, நிர்வாகி அறையைத் தேடி வேகமாக நடக்கத் தொடங்கிவிட்டார். பாவேந்தரைப் பார்த்த நிர்வாகி திகைத்துப் போனார் எப்படியாவது எங்க காரோட்டிக்கும் ஒரு சீட்டு ஏற்பாடு செய்யவேண்டும் என்ற பாவேந்தரின் வேண்டுகோளைத் தட்டமுடியாமல், இன்னொரு தனி இருக்கையைப் போட்டுக் காரோட்டியும் படம் பார்க்க வழி செய்து கொடுத்தார். பாவேந்தர் முகத்தில் அப்போதுதான் மகிழ்ச்சி பூத்தது.

காரோட்டிதானே- பரவாயில்லை. நாம் போய் படம் பார்த்து வருவோம். அவர் காரில் இருக்கட்டும் என்று இல்லாமல் தான்பெறும் இன்பத்தில் மற்றவர்களும் பங்குபெற வேண்டும் என்ற அவரின் பேருள்ளம்,

துன்பம் பிறர்க்குநல்
இன்பம் தமக்கெனும்
துட்ட மனோபாவம்

அன்பினை மாய்க்கும்
அறங்குலைக்கும்நல்
ஆக்கந்தனைக் கெடுக்கும்
வன்புக்கெல்லாம் அதுவே
துணையாய்விடும்,
வறுமை எல்லாம் சேர்க்கும்
இன்பம் எல்லார்க்கும் என்றே
சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்!

என்று பாடிய பேருள்ளம் அல்லவா! இப்படி எண்ணற்ற உண்மை நிகழ்ச்சிகளைக் காட்சிகளாக்கி உங்கள் கருத்திற்கு விருந்தாக்க முடியும். அப்படிப்பட்ட அன்பு மனத்திற்குச் சொந்தக்காரரான அவரைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான் கருத்தாழம் மிக்க அவர் கவிதைகளைச் சரியாக மொழிபெயர்த்துக் கவிதைகளாக்க முடியும் என்பது என் கருத்து.

## தலைவர் வேதனை

இந்தக் கருத்தரங்கின் தலைவர் மதிப்புமிகு பேராசிரியர் முனைவர் கி.அரங்கன் அவர்கள் தன் தலைமை உரையில், பாவேந்தர் கவிதைகள் அதன் சிறப்புகள் ஆந்திரா - கர்நாடகம் - கேரளா போன்ற அண்டை மாநில மக்களைக்கூட எட்டவில்லை என்று குறிப்பிட்டார். அவரின் மனவேதனை தெளிவான வேதனையாகும். இதற்குக் காரணம் யார்? நாம்தான் என்பது என் கருத்து. அவர்கள், அதாவது இந்தியாவின் பிற மாநில மக்கள் பாவேந்தர் அவர்களுக்கு எதிரானவர்; பிற மொழியினர்க்கு எதிரானவர், குறுகிய பார்வையுடையவர், இந்தியப் பெருநாட்டின் ஒற்றுமைக்கு உலைவைக்கும் தேசவிரோதக் கொள்கை உடையவர். குறுகிய எல்லைக் கோட்டில் நின்று தமிழர் - திராவிடர்க்கு மட்டுமே பாடிய கவிஞர் என்றெல்லாம் தவறாக நினைத்துள்ளனர். இந்தப் பழித்திரையைச் சாமர்த்தியமாக முதலில் நாம் விலக்கியாக வேண்டும்.

புரட்சிக்கவிஞர் தொடக்கத்தில் இந்தியப் பெருநாட்டின் விடுதலைக்குப் பாடியவர். தேசிய இயக்கத்தில் இணைந்து பாடுபட்டவர் என்பதை ஆதாரபூர்வமாக அவர்கள் முன் நாம் வைக்க வேண்டும். அதுமட்டுமல்ல இந்திய விடுதலைப் பெருங்கவிஞர் பாரதி பிரிட்டிஷ் ஆதிக்க வர்க்கத்தால் தேடப்பட்டபோது புகலிடம் தேடிப் புதுவைக்கு வந்த அந்த மகாகவியின் அன்புத் தொண்டராக -- தோழராக விளங்கிக் காத்தவரில் புரட்சிக்கவிஞர் முதன்மையானவர் என்பதை அவர்கள்முன் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

## அவர் ஒரு தேசியக் கவிஞர்

இடையில் தமிழ் - தமிழர் நலன் பாதிக்கப்படுமோ எனப் பாவேந்தர் அஞ்சியபோது அன்று தமிழர் பேரியக்கமாக எழுந்துநின்ற சுயமரியாதை இயக்கத்தில் இணைந்து சுயமரியாதைக் கவிஞனாக அவர் ஒளிவீசியது உண்மைதான். ஆனால், அந்த எல்லைக் கோட்டுக்குள் மட்டுமே அவர் நின்றார் என்பது பாவேந்தர் பாட்டுப் பாதையைச் சரியாக அறியாதார் வைக்கும் நொண்டி வாதமாகும்! அவர் தொடக்கத்திலும் இந்திய தேச நலன் நாடிய தேசியக் கவிஞராக விளங்கினார். அந்தப் பாடல்கள் - கவிதைகள் - அவை வெளிவந்த் அந்நாளைய ஏடுகள் என்று விரித்துக் கூறினால் நேரம் போதாது. இதுபற்றித் தனியான கருத்தரங்கில் பேச வாய்ப்பேற்பட்டால் விரிவாகப் பேசலாம்.

## சீனப்போர்

பாவேந்தரின் இறுதிநாள்களில் அவர் இந்தியப் பெருநாட்டின் நலம் நாடுவோராகவே வாழ்ந்தார். அதை அவருடன் வாழ்ந்த என்னைப் போன்றோர் நேரில் அறிந்துள்ளோம். நேரங்கருதி விரிவாகத் தெளிவுபடுத்த இயலாவிட்டாலும் சுருக்கமாகவேனும் சொல்ல வேண்டியதைச் சொல்வேன்.

சீனப்போர் 1962இல் நடைபெற்றபோது புரட்சிக்கவிஞர் கொதித்தெழுந்து இந்திய நாட்டினர்க்கு எழுச்சியூட்டும்

வகையில் பல எழுச்சிக் கவிதைகள், பாடல்கள் எழுதினார். அவை தென்றல், இனமுழக்கம், முன்னணி போன்ற பல ஏடுகளில் அந்நாளில் வெளிவந்தன. அழைப்பு, உலகின் அமைதியைக் கெடுக்காதே என் நாட்டில் கை வைத்தாய் சீனா, சீனக்காரன் தொலைந்தான் சீனாவை எதிர்ப்பது தமிழர் கடன், முனையிலே முகத்து நில், வருக போரே தேசத்தைக் காத்தல் செய், சூயென்லாய் சீனரின்நோய் போன்ற பல போர்ப்பாடல்களை முழங்கினார். இந்தியர் ஒற்றுமை-பகையை இந்தியர் ஒன்றுபட்டு எதிர்த்தல் என்ற கருப்பொருள்களோடு எழுதப்பட்ட அந்தக் கவிதைகள் எல்லாம் அவர் தமிழர் எழுச்சிக் கவிஞர் மட்டுமல்ல, தேவைப்பட்டால் இந்தியப் பெருநாட்டின் வாழ்வுக்கும், வளத்திற்கும் தன்னை அர்ப்பணிக்கும் கவிஞர் பாரதிதாசன் என்பதை மெய்ப்பித்த கவிதைகளாகும். அதனினும் ஒருபடி மேலே சென்று, புரட்சிக்கவிஞர் இந்திய மக்களுக்கு எழுச்சியூட்டும் வகையில் போர்வெளிச் சீனரை எதிர்த்து விரட்டும் நோக்கில் பாரதப் பாசறை என்ற நாடகத்தையும் எழுதி, இராசா அண்ணாமலை மன்றத்தில் அவரின் 73-ஆம் பிறந்த நாளில் அரங்கேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் செய்தி பாவேந்தரை முழுமையாக ஆய்வாளர்கள் - மொழிபெயர்ப்பாளர்கள் அறிந்து கொள்ள உதவும் என நம்புகிறேன். இதுபற்றியெல்லாம் அந்நாளில் தேசியவாதிகளும் தேசிய அரசுகளும் கவலைப்படவில்லை. ஏன் - இன்றுவரை அவர்கள், பாவேந்தர் இந்திய நாட்டின் மானம் காக்கத் தேவைப்பட்டபோதெல்லாம் பாடி எழுச்சியூட்டியவர் என்பதை அவர்கள் அறிய முயற்சித்தனரா? என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

## பம்பாயில் பாவேந்தர்

பம்பாயில் அஞ்சுமான் தாராகி என்ற அமைப்பு இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி ஒரு கவியரங்கம் ஏற்பாடு செய்திருந்தது. பல மொழிக்கவிஞர்கள் கலந்து கொண்ட அம்மாநாட்டிற்குப் புரட்சிக் கவிஞரையும் அந்நிறுவனம் அழைத்திருந்தது. இதுபற்றி ‘நினைவலைகளில் பாவேந்தர்’ என்ற என் நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

22.05.1962ஆம் நாள் நடைபெற்ற அந்தப் பம்பாய் நிகழ்ச்சியில், பாவேந்தர் பாடிய கவிதை அவரின் உண்மையான இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் கவிதை என்பதை நாம் அறியலாம்.

அதன் தொடக்கம்:

"தென்பாற் குமரி வடபால் இமயம்
கிழக்கிலும் மேற்கிலும் கடலாய்க்கிடந்த
பெருநிலத்தின் பெயரென்ன? அத்தான்"

"நாவலத்தீவென நவில்லார் கண்ணே!"

என்று தொடங்கும் அக்கவிதை இப்படி முடிகிறது.

"இமயச் சாரலில் ஒருவன் இருமினான்
குமரி வாழ்வான் மருந்து கொண்டோடினான்!
ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற
மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்!
இமயம் மீட்கப்பட்ட திதோபார்
சீனன் செந்நீர் கண்ணீராக
எங்கோ ஓட்டம் பிடிக்கிறானடி"

என்ற அந்தக் கவிதை புரட்சிக்கவிஞரின் வாழ்நாளின் இறுதி ஆண்டுகளில் எழுதப்பட்டது என்பதை உணர்ந்தால், அவரின் உயர்ந்த உள்ளம், பரந்த உள்ளம் இந்தியப் பெருநாடு ஒன்றுபட்டு உறுதி குலையா நிலையோடு வெற்றி நடை போடவேண்டும் என்ற ஆசைப்புலனாகும். இந்தப் புதுமைக் கவிஞனை, புரட்சிக் கவிஞனைப் புதியதோர் உலகம் செய்வோம்! "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று முழங்கிய கவிஞனை நாம் மக்களுக்கு இந்தியமக்களுக்கு, உலக மக்களுக்குச் சரியாக அடையாளம் காட்ட வேண்டியது நம் கடமையல்லவா? அப்போதுதான் அவருக்கும் பெருமை - நமக்கும் பெருமை! தமிழர்க்கும் பெருமை!

## எப்படி வரும்

அதை விட்டுவிட்டு, அவர் தமிழுக்கு மட்டுமே பாடினார், தமிழர்க்கு மட்டுமே பாடினார். திராவிடர்க்கு மட்டுமே பாடினார்! பிற இனத்தவரை எல்லாம் சாடினார் என்று அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருந்தால், பாவேந்தருக்கு இந்தியப் புகழ் - உலகப் புகழ் எப்படி வந்து சேரும்? இதுபற்றி எல்லாம் பாவேந்தர் பற்றாளர்களும்-மொழிபெயர்ப்பாளர்களும் - ஆய்வாளர்களும் அறிஞர்களும் சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

## உலகக் கவிஞன்

"ஏறுவிடாமல் ஏறு மேன்மேல்
ஏறிநின்று பாரடா எங்கும்!
எங்கும் பாரடா இப்புவிமக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
என் குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்!
அறிவை விரிவு செய், அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள் உன்னைச் சங்கமாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு
பிரிவினை எங்கும் பேதமில்லை!
உலகம் உண்ணஉண் உடுத்த உடுப்பாய்
புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்துப் பொதுவில் நடத்து!"

என்று புதுவழிகாட்டிப் போர்ப்பறை முழங்கிய கவிஞன் நம் புரட்சிக்கவிஞன் அவன். தமிழர்க்கு மட்டுமோ, தமிழ் நாட்டிற்கு மட்டுமோ சொந்தமான கவிஞன் இல்லை. உலக மக்களுக்கே சொந்தமான உலகப் பெருங்கவிஞன் அவன். அந்த உலக மகாகவியின் படைப்புகள் வழியில், உலகம்

பயன்பட உழைப்போம்! உலகப் பெருங்கவிஞனாக அப்புதுமைக் கவிஞரை அடையாளங் காட்டுவோம்!

அதற்கு ஆன வழிகளில் எல்லாம் நம்மில் ஒவ்வொருவரும் செயல்படுவோம்!

## ஐந்திணைக் காட்சியகம்

தமிழரை, தமிழை பாவேந்தர் மிகவும் நேசித்தவர் என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. சங்ககாலத் தமிழரை, அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளைப் பெரிதும் போற்றியவர் அவர். சங்க இலக்கியங்கள் மேன்மையை உலகறியச் செய்யவேண்டும் என்பது அவர் வாழ்க்கை நோக்கமாக இருந்தது. தமிழ் இலக்கியம் கண்ட ஐந்திணைச் சிறப்பு வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பாகும்.

எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நிலப்பரப்பில் ஒரு திணைக்கு 100 ஏக்கர் என்று ஐந்து திணைகளுக்கும் 500 ஏக்கர் நிலம் ஒதுக்கி, ஐந்திணைக் காட்சிகளை அந்நிலப்பரப்பில், அமெரிக்காவின் 'டிஸ்னி லேண்ட்' போல வரலாற்றைப் பேணிகாக்கும் நோக்கோடும் சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்திழுக்கும் வகையில் உருவாக்கலாம். இதனால் தமிழகத்திற்குப் பெரும் பெருமை வந்து சேரும் - வருமானமும் வந்து குவியும் என்பது என் கருத்து.

ஒவ்வொரு திணையின் நிலத்தன்மை, பறவைகள், விலங்கினங்கள், மரஞ்செடி கொடிகள், அந்நிலத்தின் பண், வாழும் அந்நிலத்தின் மக்கட்பண்புகள் இப்படி அனைத்தையும் நவீன தொழில்நுட்ப வசதிகளின் துணையுடன், ஒலி ஒளிக் காட்சிகளுடன் மத்திய அரசின், உலக வங்கியின் துணையுடன், இச்செயற்கரிய செயலைச் செய்தால், தமிழ்ச் சமூகத்தின் சீரிய வாழ்க்கை வரலாறும் காப்பாற்றப்படும். பயிரியல், உயிரியல், நிலவியல், வாழ்வியல் அறிவும் வளர வருங்கால நம் சந்ததியினர்க்குக் கல்வி நோக்கில் துணைநிற்கும் என்பதில் ஐயமே இல்லை. அதுமட்டுமல்லாமல் வருங்காலத்

தலைமுறைக்கு வருமானத்திற்கும் வழிவகுக்கும் என உறுதியாக நம்புகிறேன். இதுதொடர்பாக, நம் துணைவேந்தர் அவர்களும், இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பளித்துக் கொண்டிருக்கும் உண்மைத் தமிழ்த் தொண்டர் - இத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதிப்புமிகு உபயதுல்லா அவர்களும் இதுபற்றிச் சிந்தித்து, தமிழக அரசை அணுகி வழிகாண வேண்டும் என்று என் வேண்டுகோளை உங்கள் முன் வைத்து விடைபெறுகின்றேன்.